பக்கங்கள்: பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 வைகாசி 07 வியாழக்கிழமை (21.05.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 176

# யுத்தம் முடிவுக்கு வந்துள்ளதால் அவசர காலச் சட்டத்தை நீக்குக!

## அரசிடம் ஐக்கிய தேசியக் கட்சி கோரிக்கை

கொழும்பு, மே 21

நாட்டில் யுத்தம் முடிவடைந்து விட்டதால் அவசரகாலச்சட்டம் நீக்கப்பட வேண்டும் என்று அரசாங்கத்திடம் ஐக்கிய தேசியக் கட்சி கோரியுள்ளது.

இனிமேல் அவசரகாலச் சட்டம் தேவையில்லை என்பதால் அரசு அதனை நீக்கிவிட வேண்டும் என்று அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும் பொதுச்செயலாளருமான திஸ்ஸ அத்தநாயக்கா தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தற்போது யுத்தம் முடிவுக்கு வந்துள்ளது. இருப்பினும், அவசரகாலச் சட்டம் இன்னும் நடைமுறையில்தான் உள்ளது. தொடர்ந்தும் அவசரகாலச் சட்டத்தின் ஊடாக நாட்டை நிர்வகிக்க முடியாது.

நாட்டில் கடத்தல், கப்பம்கோரல், கொலை போன்ற மனித உரிமை மீறல் நடவடிக்கைகள் இடம்பெற்றதால் அவசர காலச் சட்டம் நடைமுறையில் இருக்க வேண்டிய தேவை ஏற்பட்டது.

அவசரகாலச் சட்டத்தை நாம் எதிர்க்கவில்லை. (16 ஆம் பக்கம் பார்க்க)

## மோதல் பகுதிகளில் பணியாற்றிய வைத்தியர்கள் பொலிஸாரிடம்

### அமைச்சர் மஹிந்தசமரசிங்க

கொழும்பு, மே 21

மோதல் இடம்பெற்ற பகுதிகளில் பணியாற்றிய டாக்டர்கள் வரதராஜன், சத்தியமூர்த்தி ஆகியோர் பொலிஸாரிடம் விசாரணைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளனர் என மனித உரிமை விவகாரங்களுக்கான அமைச்சர் மஹிந்த சமரசிங்க அல்-ஜெசிரா தொலைக்காட்சிக்குத் தெரிவித்துள்ளார்.

அங்கு பணியாற்றிய 3 வைத்தியர்கள் குற்றப்புலனாய்வு விசாரணைப் பிரிவினரால் தடுத்து (16 ஆம் பக்கம் பார்க்க)

## அகதிகளுக்கு மனிதாபிமான உதவி கிடைப்பதை உறுதிசெய்யக் கோருகின்றார் பிரிட்டிஷ் பிரதமர்

### மஹிந்தவிடம் தொலைபேசி மூலம் வலியுறுத்து

கொழும்பு, மே 21

இலங்கையில் மோதல் காரணமாக இடம்பெயர்ந்த ஆயிரக்கணக்கான மக்களுக்கு மனிதாபிமான உதவி கிடைப்பதை உறுதிசெய்யுமாறு பிரிட்டிஷ் பிரதமர் கோர்டன் பிரவுண் இலங்கை ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் தொலைபேசியில் உரையாடியவேளை தாம் இதனை வலியுறுத்தினார் என மாதாந்த செய்தியாளர் மாநாட்டில் பிரிட்டிஷ் பிரதமர் செவ்வாய்க்கிழமை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இலங்கை ஜனாதிபதியுடன் தொலைபேசியில் உரையாடிய வேளை, மோதலால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்த ஆயிரக்கணக்கானவர்களுக்கு நிவாரண உதவி கிடைப்பதை (16 ஆம் பக்கம் பார்க்க)

உள்ளே ☞
6 ஆம் 11 ஆம் பக்கங்களில்
கல்விச்சுடர்
தரம் – 05 புலமைப்பரிசில் மாணவருக்கான தயார்படுத்தல் பரீட்சைத் தொடர்

## அரசு விதித்துள்ள தடை காரணமாக முகாம்களுக்குச் செல்லும் பணி முடக்கம்

### அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம் கவலை

கொழும்பு, மே 21

வவுனியாவின் சில அகதி முகாம்களுக்குச் சென்றுவர, கடந்த வாரத்திலிருந்து இலங்கை அரசு விதித்த தடை காரணமாக பெருமளவு மக்களுக்கு உதவியளிக்கும் பணிகள் பாதிப்படைகின்றன என அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம் யூ.என்.எச்.சி.ஆர். விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ள முக்கியமான விடயங்கள் வருமாறு:-

இடம்பெயரும் மக்களுக்கு உதவியளிக்க அரசு கடும் சவால்களை எதிர்கொள்கிறது. அத்துடன், அகதிமுகாம்களில் உடனடியாகக் கவனிக்கப்படவேண்டிய விடயங்கள் பல உள்ளன.

பெருமளவு மக்கள் இடம்பெயர்ந்துள்ளதால் அகதிமுகாம்கள் நிரம்பி வழிகின்றன. அதேவேளை, அந்த அகதிமுகாம்களிலுள்ள மக்களுக்குத் தேவையான சேவைகளைக் குறிப்பிட்டளவே மேற்கொள்ளப்படுகிறது.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## தேவை ஏற்பட்டால் மட்டுமே பிரபாவின் உடல் மரபணுப் பரிசோதனைக்கு உட்படுத்தப்படும்

### இராணுவப் பேச்சாளர் சொல்கிறார்

கொழும்பு, மே21

விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் உடல் இன்னமும் மரபணுப் பரிசோதனைக்கு உட்படுத்தப்படவில்லை. தேவையேற்பட்டால் மட்டுமே மரபணுப் பரிசோதனைக்கு உட்படுத்துவோம். இவ்வாறு கூறியிருக்கிறார் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பு வருவதற்கு முன்னர் நாராயணன் கருணாநிதியைச் சந்தித்து இலங்கை குறித்துப் பேச்சு

புதுடில்லி, மே 21

இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே.நாராயணன் இன்று கொழும்பு வருகிறார். கொழும்புக்கு செல்வதற்கு முன்னர் அவர் நேற்று முதலமைச்சர் கருணாநிதியை டில்லியில் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

கனிமொழியின் இல்லத்தில் இந்தச் சந்திப்பு நடைபெற்றது. இலங்கையில் தற்போதுள்ள நிலைமைகள் குறித்து அவர் முதல்வரிடம் விளக்கினார். இந்தச் சந்திப்புக்குப் பின்னர் செய்தி யாளர்களிடம் பேசிய நாராயணன், அப்பாவித் தமிழ் மக்கள் பாதுகாப்புடன் வாழ வகை செய்வதே இந்தியாவின் தற்போதைய நோக்கம் என்று குறிப்பிட்டார்.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னியில் பணியாற்றிய ஐ.சி.ஆர்.சியின் 19 உள்ளூர் பணியாளர்களைக் காணவில்லை

கொழும்பு, மே 21

வன்னியில் பணியாற்றிய செஞ்சிலுவை சர்வதேசக்குழுவின் (ஐ.சி.ஆர்.சியின்) உள்ளூர் பணியாளர்கள் 19பேர் அவர்களது 3 குடும்பத்தவர்களுடன் காணாமற் போயுள்ளனர் என அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.

செஞ்சிலுவைக் குழுவின் இலங்கைக்கான தலைவர் போல் சஸ்டெலா இதனைத் தெரிவித்துள்ளார்.

இவர்கள் பாதுகாப்பு வலயத்தில் காயப்பட்ட மக்களை வெளியேற்றும் பணியில் ஈடுபட்டிருந்தனர் எனத் தெரிவித்துள்ள போல் கஸ்டெலா, அந்த மக்களுக்கு ஏற்பட்ட கதி இவர்களுக்கும் ஏற்பட்டிருக்கலாம், அவர்கள் எங்கிருக்கிறார்கள் என்பது தெரியாமல் நாங்கள் ஆழ்ந்த கவலையடைந்துள்ளோம் எனக் குறிப்பிட்டுள்ளார்.

மோதல் நடைபெற்ற பகுதிகளில் எவராவது சிக்குண்டுள்ளனரா எனப் பார்ப்பதற்கு அங்கு செல்வதற்கான அனுமதியையும் அவர் (16 ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டில் உள்ள விடுதலைப்புலி உறுப்பினர்கள் 48 மணி நேரத்தில் இராணுவத்திடம் சரணடைய வேண்டும்

### பலாலி படைத்தலைமையகம் அறிவிப்பு

யாழ்ப்பாணம், மே 21

குடாநாட்டில் உள்ள விடுதலைப் புலி உறுப்பினர்கள் சகல வன்முறைகளையும் கைவிட்டு 48 மணித்தியாலத்திற்குள் இராணுவத்திடம் சரண் அடையுமாறு கேட்கப்பட்டுள்ளது.

அதே வேளை விடுதலைப்புலி உறுப்பினர்களுக்கு பாதுகாப்பு மற்றும் தங்குமிடம் உள்ளிட்ட வசதிகளைக் கொடுத்து உதவுவது தவறு என்றும் அவர்களை இராணுவத்திடம் சரண்அடையச் செய்வதற்கான ஏற்பாடுகளையும் செய்யுமாறும் பாதுகாப்புப் படைகளின் யாழ் தளபதி பொதுமக்களைக் கேட்டுள்ளார்.

இது தொடர்பாக பலாலி பாதுகாப்புப் படைகளின் யாழ் தளபதி விடுத்த செய்திக் குறிப்பில் (15 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# நோட்டனில் மண்சரிவு; 6 பேர் பலி

கொழும்பு, மே, 21

ஹட்டன் பிரதேசத்தின் நோட்டன் - தியகல வீதியில் ஏற்பட்ட மண் சரிவில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 6 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்றுக்காலை 6.30 மணியளவில் இடம்பெற்றது என பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

குறித்த பகுதியில் நோட்டன் நகருக்கு அருகிலுள்ள வீடொன்றின் மீது மண்மேடொன்று சரிந்து வீழ்ந்ததினாலேயே இந்த உயிரிழப்பு ஏற்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவத்தை அடுத்து குறித்த பிரதேசத்திலுள்ள பொதுமக்கள் பொலிஸாருடன் இணைந்து சடலங்களை மீட்டுள்ளனர்.

இதேவேளை, மத்திய மாகாணத்தின் பல பகுதிகளிலும் நேற்று முன்தினம் தொடக்கம் அடைமழை பெய்துவருகின்றது என பிரதேச மக்கள் கூறுகின்றனர். அப்பகுதியில் ஏற்பட்டுள்ள அவசர நிலைமை தொடர்பாக ஆராய இடர் முகாமைத்துவத் திணைக்கள அதிகாரிகள் இருவர் அங்கு விஜயம் மேற்கொண்டுள்ளனர் (சி)

## கண்ணீர் அஞ்சலி

எமது நிறுவனப் பணியாளர்களான திருமதி உதயகுமார் மேரி நிர்மலி அவர்களின் தாயாரும் மாட்டீன் யோன்சன் உதயகுமார் அவர்களின் மாமியாருமான

### திருமதி அமிர்தநாதர் மேரி அல்போன்ஸா



அவர்களின் மரணச்செய்தி கேட்டு ஆழ்ந்த துயரடைகின்றோம். அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் பிள்ளைகள், சகோதரர்கள் மற்றும் உறவுகளுக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கியுடெக் - கரித்தாஸ்,
யாழ்ப்பாணம்.

இயக்குநர்,
பணியாளர்கள்.

## மரண அறிவித்தல்கள்

### கதிரவேலு கந்தசாமி

(ஓய்வுபெற்ற களஞ்சிய உதவியாளர், ப.நோ.கூ.சங்கம், நீர்வேலி)

பிராமண ஓடை, கோப்பாய் வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலு கந்தசாமி நேற்று முன்தினம் (19.05.2009) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேலு- கதிராசிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும், பொன்னம்மா -சிவக்கொழுந்து தம்பதியினரின் மருமகனும் கமலாதேவியின் (கிளி) அன்புக் கணவரும், சபேஷ் (மாணவன், மொரட்டுவப் பல்கலைக்கழகம்), ஸ்ரீரூபன் (க.பொ. த. உயர்தரம் 2009 கணிதப் பிரிவு மாணவன், கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவசுப்பிரமணியம் காலஞ்சென்றவர்களான தங்கம்மா, அன்னப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.05.2009) வியாழக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மு.ப.11 மணிக்கு கோப்பாய் கந்தன் காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

தகவல்:
மனைவி,
பிள்ளைகள்.

பிராமண ஓடை,
கோப்பாய் வடக்கு, கோப்பாய்.

### திருமதி மகாலிங்கம் எமிலின்



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகாலிங்கம் எமிலின் 17.05.2009 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் சின்னப்பு மகாலிங்கத்தின் அன்பு மனைவியும் ஜெ.டொலறோசா, டொறின் யசிந்தா(France), ஜெராட்(France), சுதர்சன் (France), டொறின் ஜெற்றூட் (France), விக்டோறியா (ஆசிரியை, யா/ வண் ஸ்ரீ வைத்திலிங்கம் வித்தியாலயம், ஆறுகால்மடம்), ஜெயசீலி(France) ஆகியோரின் அன்புத் தாயும் ஜெயராசா, அன்ரன், ஜிறின் யூஜின், வினிஸ்ரலா, உதயகுமார், எல்விஸ் பிரஸ்லி,கிளேற்றஸ் ஆகியோரின் மாமியும் ஜெயநீகன் (நிக்சலா), செறின்ஜடா, டயானா, பெதறிக்சன்,றொலிங்சன், ஜெபின், ஜெனுசியா, ஜெறோமி, கெவின், எமில்ரன், கரோலின், திவ்யா, டயன், டொறியோன், ஜெறோம், டிறோன்சன் ஆகியோரின் பேர்த்தியும் கதறீனாவின் பூட்டியும் ஆவார்.


அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (22.05.2009) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் ஆனைக்கோட்டை O.L.R. ஆலயத்தில் நடைபெற்று காக்கைதீவு சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி.மகாலிங்கம்
(கண்வர்).

குருசு மதவடி,
ஆனைக்கோட்டை.

### சின்னப்பொடி கண்ணுச்சாமி கறோல்ட்



யாழ்ப்பாணம், நாவாந்துறையைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் தற்போது கனடாவில் வசித்தவருமான சின்னப்பொடி கண்ணுச்சாமி கறோல்ட் 19.05.2009 செவ்வாய்க்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்தஅறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அ.பஞ்சாட்சரம்
இல-34, A.P. ஒழுங்கை,
நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
0774115387

தகவல்:
குடும்பத்தினர்.

# கோப்பாய் தெற்கு ஸ்ரீ வீரமாகாளி ஆலயத்தில் இன்று தேர் வெள்ளோட்டம்

யாழ்ப்பாணம்,மே 21

தென்கோவை விளையாட்டரங்க வீதி, அழகியவான் ஸ்ரீ வீரமாகாளி அம்பாள் ஆலயத்தில் புதிதாக அமைக்கப்பட்ட சித்திரத் தேர் வெள்ளோட்டம் இன்று காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது.

வெள்ளோட்ட நிகழ்வை ஒட்டி விசேட நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. (சிறப்பிதழ் 8,9ஆம் பக்கங்களில்) (1)

# ஆனைக்கோட்டையில் தேர்த்திருவிழா

யாழ்ப்பாணம், மே 21

ஆனைக்கோட்டை, கரைப்பிரான் ஆதிவிநாயகர் ஆலய பெருந்திருவிழாவில் இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு தேர்த்திருவிழா இடம்பெறவுள்ளது. நாளை வெள்ளிக்கிழமை காலை 7.45 மணிக்கு தீர்த்தத் திருவிழா நடைபெறும். (சிறப்பு மலர் 5 ஆம் பக்கத்தில்) (1-100)

# சிற்பத்தேர் வெள்ளோட்ட விழா

சங்கானை, மே 21

பண்டத்தரிப்பு, காலையடி ஞான வேலாயுத சுவாமி ஆலய சிற்பத்தேர் வெள்ளோட்ட விழா நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

மறுநாள் சனிக்கிழமை தேர்த்திருவிழாவும் ஞாயிற்றுக்கிழமை தீர்த்தோற்சவ விழாவும் நடைபெறவுள்ளதாக ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (1-29)

# கிணற்றில் தவறி வீழ்ந்து மாணவி மரணம்

கோப்பாய், மே 21

கோப்பாய் மத்திய பகுதியில் சிறுமி ஒருவர் கிணற்றில் தவறி வீழ்ந்து பரிதாபகரமாக உயிரிழந்தார்.

செல்வி அஸ்வினி பரமேஸ்வரன் (வயது - 11) என்ற மாணவியே உயிரிழந்தார்.

கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயத்தில் கல்வி பயிலும் இந்த மாணவி நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை காலை பாடசாலை செல்வதற்காக குளிப்பதற்கு கிணற்றில் நீர் அள்ளியபோதே கப்பி அறுந்து சமநிலை குழம்பியதால் கிணற்றில் தவறி வீழ்ந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

மாணவியின் சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (1-72-78)

# வன்முறையற்ற தொடர்பாடல் கருத்தரங்கு நாளை

வண்ணை, மே 21

சீப்பீயர் பணியகத்தால் மேற்கொள்ளப்படும் ஆசிரியர்களுக்கான வன்முறையற்ற தொடர்பாட்ல் கருத்தரங்கு நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணியில் இருந்து 2.30 மணிவரை யா/ கொட்டடி நமசிவாய வித்தியாலயத்தில் நடைபெறும்.

அன்றையதினம் பிற்பகல் 3.30 தொடக்கம் 4.30 மணி வரை நாவற்குழி சனசமூக நிலையத்தில் கிராமியச் சிறுவர்களுக்கான சமாதானக் கல்விச் செயற்பாடு நடைபெற உள்ளது. (4-160)

# இறுதியாட்டம்

யாழ்ப்பாணம், மே 21

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் ஏற்பாட்டில் இ.ச.பேரம்பலம் சக நிறுவனத்தின் ஆதரவுடன் நடத்தப்பட்டு வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் 17 வயதுப் பிரிவினருக்கு இன்று பிற்பகல் 3.30 மணிக்கு இறுதியாட்டம் இளவாலை ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த ஆட்டத்தில் இளவாலை ஹென்றியரசர் கல்லூரியும் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயமும் மோதவிருக்கின்றன்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக ஹென்றியரசர் கல்லூரி அதிபர் ஜே.ஒ.யேசுதாஸ் அடிகளும், சிறப்பு விருந்தினராக ஈ.எஸ்.பேரம்பலம் நிறுவனப் பொறுப்பாளர் ஈ.ஆர்.எஸ்.நாகரத்தினமும் கலந்துகொள்வர். (1)


## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள போட்டோக் கொப்பி மெசின் (Canon),லெமனேற்றிங் மெசின், சன்டெல் தொலைபேசி, கணனி(Dual-core), அலுமினிய பிற்றிங்ஸ் என்பன கடையுடன் அல்லது தனித்தனியாகவும் விற்பனைக்குண்டு.

தமிழ் நெற்கொம்

தொ.பே:- 0774129203, 0214591062


# நூலகவியல் கற்கைநெறி சனியன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், மே 21

இலங்கை நூலகச் சங்கத்தால் நடத்தப்படும் நூலகவியல் முதலாம் நிலை மாணவர்களுக்கான ஆரம்ப நிகழ்வு நாளை மறுதினம் சனிக்கிழமை மு.ப. 9.30 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இந்த ஆரம்ப நிகழ்வில் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்கள் அனைவரையும் சமுகமளிக்குமாறு சிரேஷ்ட நூலகர் திருமதி ல.உமாசங்கர் கேட்டுள்ளார். (1)

# மோட்டார் சைக்கிள் மோதி மாணவி காயம்

வலி.வடக்கு, மே 21

வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் மோதி மாணவி ஒருவர் படுகாயமுற்ற நிலையில் யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் கல்வி பயிலும் மாணவி கல்லூரியில் இருந்து வீட்டுக்கு சென்றுகொண்டிருந்த போதே மோட்டார் சைக்கிள் மோதியதாக தெரிவிக்கப்படுகிறது.

## ஓராண்டும் ஐந்தாண்டும் நினைவுகள்



மலர்வு:- 26.11.1927
உதிர்வு:- 17.05.2004

**கதிர்காமு சுப்பிரமணியம்**



மலர்வு:- 14.08.1932
உதிர்வு:- 31.05.2008

**சுப்பிரமணியம் புவனேஸ்வரி**

அன்புத் தாயே!
ஆறாய்ப் பெருக் கெடுத்த கண்ணீரில்
ஓராண்டு கழிந்ததுவே
நான்கு வருடப் பிரிவின் பின்
நீங்கள் இருவரும் ஒன்றானீர்
உங்கள் நினைவுடனும்
நல் நெறிகளுடனும்
நாம் வாழ்வோம் இம் மாநிலத்தே!
சாவு நிச்சயமானது,என்று
தேறி நிற்போம்.

'மதுரா'
அல்வாய் வட மேற்கு, அல்வாய்.
(மதுரம் பிறின்ரேர்ஸ்)

சு.மகேஸ்வரன்,
சு.புவனேஸ்வரன்,
சு.வாகீஸ்வரன்,
ஜெ.சத்தியவாணி.

## மரண அறிவித்தல்கள்

### சேனாதிராஜா சதாசிவம்

கோப்பாய் மத்தியைப் பிறப்பிடமாகவும் 1591, எல்ஜின்மெல் றோட், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட சேனாதிராஜா சதாசிவம் 17.05.2009 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சேனாதிராஜா- ஆச்சிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான செல்லையா - செல்லம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் தவமணியின் அன்புக் கணவரும் மாலதி (கனடா), பகவதி(கனடா), ரகுபதி(கனடா), சிறிகணபதி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜெயக்குமார் , சண்முகநாதன், சந்திரகலா, சாருலதா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று முன்தினம் (19.05.2009) செவ்வாய்க்கிழமை கனடாவில் நடைபெற்றன.

இந்தஅறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு:
சிறி கணபதி - 6478871866
ரகுபதி - 9052017397
பகவதி - 4163002600
மாலதி - 4167240532

தகவல்:
செ.தேவநாதன்
கோப்பாய் மத்தி,
கோப்பாய்.

### அமிர்தநாதர் மேரி அல்போன்ஸா (புனிதம்)



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வளன்புரம், கொழும்புத்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட அமிர்தநாதர் மேரி அல்போன்ஸா (புனிதம்) 19.05.2009 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிமியோன் - மேரி திரேசா தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான அந்தோனி சோதி - சோதி மாகிறேட் தம்பதியினரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சோதி அமிர்தநாதரின் அன்பு மனைவியும் மேரி கொறிஸ்ரா(வவுனியா), கிறிஸ்ரி ஜெயானந்தன்(சவூதி), மேரி நிர்மலி(கியுடெக்), குயின்மேரி, லூட்ஸ்மரியா(ஆசிரியை, பூனித பத்திரிசியார் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயும் அருள்நாயுகம்(சமுர்த்தி உத்தியோகத்தர்-வவுனியா), ஆர்வினி(பிலிப்பைன்ஸ்), யோன்சன் உதயன்(கியூடெக்), டயஸ்ரின் (வவுனியா) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று (21.05.2009) வியாழக்கிழமை கொழும்பில் நடைபெறும்.

இந்தஅறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

16/15,வளன்புரம்,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.

தகவல்:
பிள்ளைகள்.
தொ.பே.: 0772247525

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# வரலாற்றுத் தவறைப் புரிந்து கொள்ளாமல் பிராயச்சித்தம் செய்வது சாத்தியமாகுமா?

''மரபுவழி இராணுவ யுத்தத்திலேயே இலங்கை அரசுக்கு வெற்றி கிட்டியிருக்கின்றது. ஆனால் நிரந்தர சமாதானத்தை எட்டுவதற்கு அது வெகு தொலைவில் உள்ளது'' - இவ்வாறு நினைவூட்டியிருக்கின்றார் நோர்வே அமைச்சரும், இலங்கை இனப்பிரச்சினைக்கான அமைதி முயற்சிகளின் போது நோர்வே சார்பில் பிரதான அனுசரணைப்பணி வகித்தவருமான எரிக் சொல்ஹெய்ம்.

''தமிழர்களுக்கு சுயாட்சி வழங்குவதற்கான - நீதியான - செயற்பாட்டுத் திட்டம் ஒன்றை இலங்கை இனி முன்னெடுக்கத் தவறுமானால் தமது அபிலாஷைகளை எட்டுவதற்கான தமிழர்களின் போராட்டம் புதிய வடிவம் எடுக்கும்.'' - என்றும் அவர் எச்சரித்திருக்கின்றார்.

தமிழீழ விடுத்லைப் புலிகள் இயக்கத்தின் தலைமையை அழித்தொழித்த வெற்றிக் களிப்பில் - மகிழ்ச்சிக் கொண்டாட்டத்தில் - திளைத்து இருக்கும் தென்னிலங்கைத் தலைமைக்கு, சமரசத்தின் சரியான பக்கத்தை எடுத்துரைக்கும் இத்தகைய சர்வதேசத்தின் குரல் காதில் விழுமா என்பது தெரியவில்லை.

இலங்கைத் தீவில் - தமிழர் தாயகத்தில் - தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் போன்ற ஆயுதம் தாங்கிய போராட்ட அமைப்புகளின் தோற்றமும், வளர்ச்சியும் சுயாதீனமாக நிகழ்ந்தவையல்ல. பிரபாகரனின் தலைமையோ அல்லது அவரது போராட்ட வழிமுறைகளோ தனி மனிதப் பிறழ்வுகளால் பிறந்த வையல்ல.

தனித்துவமான ஓர் இனம் மீது தொடர்ச்சியாகத் திட்டமிட்டுக் கட்டவிழ்த்து விடப்பட்ட அடக்குமுறையின் விளைவாகப் பிறப்பெடுத்ததே அந்த ஆயுத எதிர்ப்புப் போராட்ட வழிமுறை என்பது மறுக்க முடியாததாகும்.

அதுவும் கூட நேரடியாக அந்த வடிவத்தில் பிறந்தது அல்ல. அடக்குமுறைகளுக்கு எதிராகவும், நீதி, நியாயமான உரிமைகள் வேண்டியும், சமரசத்துடன் கூடிய கௌரவ வாழ்வைத் தேடியும் தமிழ் மக்கள் சுமார் முப்பது ஆண்டுகளாகக் காந்தீயப் பாதையில் - சாத்வீக நெறியில் - அஹிம்சைப் பாதையில் - நடத்திய அறவழிவயப்பட்ட போராட்டங்கள் தொடர்ந்து வந்த பேரினவாத ஆட்சிப் பீடங்களால், ஆயுத முனையில் பலாத்காரக் கரங்கொண்டு அடக்கப்பட்டு, நசுக்கப்பட்டு வந்த சூழலில் வரலாற்றின் பிறப்பாக்கமாகவே ஆயுதம் தாங்கிய போராட்ட மார்க்கத்திற்குத் தமிழினம் தள்ளப்பட்டது.

அந்த ஆயுதப் போராட்ட மார்க்கத்தை அடியோடு நசுக்கி, அழித்துவிட்டோம் என இப்போது மார்தட்டும் தென்னிலங்கைத் தலைமைகள், அந்த மார்க்கத்திற்குத் தமிழர்களைத் தள்ளிச் சென்ற நியாயங்களைப் புரிந்துகொண்டு, அவற்றை வெளிப்படுத்தி, அத்தகைய சூழ்நிலை ஏற்படாமல் நியாயம் செய்வோம், நீதியாக நடந்துகொள்வோம் என்று அறிவிக்க இன்னமும் முன்வரவில்லை என்பது இப்போதும் கவனிக்கத்தக்க விடயமாக முன்னே நிற்கின்றது.

வரலாற்று ரீதியாகத் தமது தாயக மண்ணில் தமக்கு இருக்கும் பாரதீனப்படுத்தமுடியாத உரிமைகளை வேண்டி, இத்தீவில் தமிழர் தரப்பில் நடத்தப்பட்ட ஆயுதப் போராட்டத்தை 'பயங்கரவாதம்' என்றும் 'பிரிவினை வாதம்' என்றும் தெளிவாக வலியுறுத்தும் தென்னிலங்கை, அந்தப் பயங்கரவாதத்தையும் பிரிவினைவாதத்தையும் தான் வெற்றிகரமாக முறியடித்து விட்டதாகப் பிரகடனப் படுத்தும் இச்சமயத்தில் கூட, அவை பிறப்பெடுக்கக் காரணமாக இருந்த அடிப்படைக் காரணிகளையும், சூழல்களையும் புரிந்துகொண்டதாகவோ, அல்லது புரிந்துகொண்டதாகக் காட்டிக் கொள்ளவோ தயாராக இல்லை என்பது இயல்பாகவே வெளிப்படுகின்றது.

அப்படிப் புரிந்து கொள்ளாத நிலையில் - அல்லது புரிந்து கொள்ள முன்வராத நிலையில் - இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு என்றும் 'உள்நாட்டில் இணக்கம் கண்டு உருவாக்கப்பட்ட யோசனைத் திட்டம்' என்றும் வாய்ப்பந்தல் போடுவதில் அர்த்தம் ஏதும் இல்லை.

அத்தகைய முயற்சிகள் இப்பத்தியில் நாம் ஏற்கனவே சுட்டிக்காட்டியமை போன்று நோயின் மூலத்துக்கு - அடிப்படைக் காரணிக்கு - வைத்தியம் செய்வதை விடுத்து, அந்த நோயின் குணங்குறிக்கு - வெளிப்பாட்டு வடிவத்துக்கு - வைத்தியம் செய்யும் எத்தனமாகவே இருக்கும்.

புலிகள் இயக்கமும், பிரபாகரன் போன்ற போராட்டத் தலைமையும் பிறப்பெடுக்க - உருவாக - காரணமாக அமைந்த விடயங்களைத் தொட்டுக்காட்டி, அத்தகைய சூழல் மீண்டும் ஏற்படாத வகையில், நியாயத்தை நிலைநாட்டி, தீர்வை எட்ட முயல்வோம் என்று இந்தக் கட்டத்தில் அரசுத் தலைவர் அறிவித்திருப்பாரேயானால், அது தமிழர்கள் மத்தியில் சற்று நம்பிக்கையைத் தந்திருக்கும்.

அத்தகைய போரியல் சூழல் பிறப்பெடுப்பதற்கான வரலாற்றுக் கட்டாயத்தைத் தாங்களே ஏற்படுத்தினோம் என்ற உண்மையை தென்னிலங்கை புரிந்து, ஏற்றுக்கொண்டு, அத்தகைய தவறு மீண்டும் நேராமல் பார்த்துக் கொள்வதில் அது உறுதியாக இருப்பதற்கு முன்வந்தால் நல்லிணக்கமும், சமரசமும், சமாதானத் தீர்வும், சகல இனங்களுக்கும் திருப்தி தரும் சகவாழ்வும் இத்தீவில் சாத்தியப்படும் என்று நம்பிக்கையுடன் எதிர்பார்க்கலாம்.

# நலன்புரி நிலையங்களில் தடைகளற்ற வகையில் மனிதாபிமானப் பணியாற்ற அனுமதிக்கவேண்டும்

## இலங்கை அரசை வற்புறுத்துகிறது யுனிசெவ்

கொழும்பு, மே 21

இடம்பெயர்ந்த மக்களுடைய நலன்புரி நிலையங்களில் முழுமையாகவும், தடையற்ற வகையிலும் மனிதாபிமான உதவிகளை வழங்குவதற்கான அனுமதிவழங்கப்படவேண்டும்என 'யுனிசெவ்' நேற்றுமுன்தினம்செவ்வாய்க்கிழமை வெளியிட்ட அறிக்கை ஒன்றின் மூலம் இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்திக் கேட்டுக் கொண்டிருக்கின்றது.

''நலன்புரி நிலையங்களில் உள்ள சிறுவர்கள் மற்றும் பெண்களுக்கு அவசரமாக உதவிகள் தேவையாக இருப்பதனால் அந்த உதவிகள் அவர்களுக்குக் கிடைப்பதை உறுதிப்படுத்துவதற்கு அந்த நிலையங்களுக்குச் சென்று வருவதற்கான அனுமதி வழங் கப்பட வேண்டும்'' என யுனிசெவ்வின் நிறைவேற்றுப் பணிப்பாளர் அன் எம்.வெனிமான் தெரிவித்தார்.

''நோய்களால் பாதிக்கப்பட்ட நிலைமையிலும், போசாக்கின்மையுடனும், போர்க் காயங்களையிட்டு கவனம் செலுத்தப்படாத நிலையிலுமே மக்கள் இந்த நிலையங்ககளுக்கு வந்திருக்கின்றனர். இந்த வார இறுதியில் இந்த நிலையங்களில் இருப்பவர்களின் எண்ணிக்கை இரண்டரை லட்சமாக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்பட்டது எனவும் அவர் குறிப்பட்டார்.

''இந்த நிலையங்களுக்கு தேவையாகவுள்ள குடிதண்ணீர், ஊட்டச்சத்து, தாய்-சேய் நலன், கல்வி, பாதுகாப்பு போன்ற விடயங்களில் மற்றைய அமைப்புக்களுடன் இணைந்து செயற்படுவதற்கு யுனிசெவ் தயாராக இருக்கின்றது எனத் தெரிவித்த அவர், தண்ணீர் மற்றும் கழிவுகளை அகற்றும் வசதிகள் முக்கியமானவை எனவும் குறிப்பிட்டிருக்கின்றார். இவற்றைப் பெற்றுத்தருவதற்கான உதவிகளைவழங்க யுனிசெவ் தயாராக விருக்கின்றது எனவும் அவர் குறிப்பிட்டார்.

பாதுகாப்பு வலயத்தின் மீது இலங்கைப் படையினர் முதற்கட்டத் தாக்குதலை நடத்தியபோது அங்கிருந்து வெளியேறிய சுமார் இரண்டு லட்சம் பேர் வவுனியாவில் உள்ள நலன்புரி நிலையங்களுக்கு வந்திருந்தார்கள்.

இந்த நிலையில் கடந்த வாரம் முதல் இடம்பெற்றுவரும் இரண்டாம் கட்டத் தாக்குதலில் மேலும் 50 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் அங்கிருந்து வெளியேறியிருக்கின்றனர். இவர்கள் அனைவரும் வவுனியாவில் உள்ள நிலையங்களிலேயே தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். (50)

# வன்னியில் பணியாற்றிவிட்டு வவுனியா சென்றபோது கைதான வைத்தியர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துக

## அனைத்துலக மன்னிப்புச் சபை அவசர கோரிக்கை

நியூயோர்க்,மே21

போர்ப் பகுதியான வன்னியில் பணிபுரிந்துவிட்டு வவுனியா வந்தபோது இராணுவத்தினால் கைது செய்யப்பட்டுள்ள மூன்று தமிழ் வைத்தியர்களின் பாதுகாப்புக்காக உடனடி நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு அனைத்துலக மன்னிப்புச் சபை அவசர கோரிக்கை ஒன்றை முன்வைத்திருக்கின்றது.

உலகம் முழுவதிலுள்ள அனைத்துலக மன்னிப்புச் சபையின் ஆயிரக்கணக்கான உறுப்பினர்கள் மற்றும் ஆதரவாளர்களை இது தொடர்பான அவசர மனுக்களை இலங்கை அரசுக்கும், தமது நாடுகளில் உள்ள இலங்கையின் தூதரகங்களுக்கும் அனுப்பிவைக்குமாறு மன்னிப்புச் சபை கோரிக்கை விடுத்திருக்கின்றது.

போர்ப் பகுதிகளில் மே 15 ஆம் நாள் வரையில் பணிபுரிந்த வைத்தியர்களான தங்கமுத்து சத்தியமூர்த்தி, துரைராஜா வரதராஜா, வி.சண்முகராஜா ஆகியோர் சுமார் 5 ஆயிரம் பொது மக்களுடன் வெளியேறி வவுனியாவை நோக்கி வந்துகொண்டிருந்தபோது ஓமந்தை சோதனைச் சாவடியில் கைது செய்யப்பட்டு தனியாகக் கொண்டு செல்லப்பட்டனர்.

அனைத்துலக மன்னிப்புச் சபைக்குக் கிடைத்த தகவல்களின்படி வைத்தியர்களான சண்முகராஜாவும் சத்தியமூர்த்தியும் கொழும்பல் உள்ள பயங்கரவாத புலனாய்வுப் பிரிவினரின் முகாமில் தடுத்துவைக்கப்பட்டிருக்கலாம் எனத் தெரிகின்றது. இருந்தபோதிலும் இத்தகவலை உறுதிப் படுத்தமுடியவில்லை.

இவர்களுக்கான தடுப்புக்காவல் உத்தரவு எதுவும் இவர்களுடைய உறவினர்களுக்குக் கொடுக்கப்படவும் இல்லை, இவர்கள் எங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்ற தகவலும் உறவினர்களுக்குத் தெரிவிக்கப்படவில்லை. அத்துடன் அவர்களது சட்டத்தரணிகள் எவரும் அவர்களுடன் தொடர்புகொள்ளவும் அனுமதிக்கப்படவில்லை.

இதேவேளை படுகாயமடைந்த நிலையில் ஓமந்தையை வந்தடைந்த வைத்தியர் வரதராஜா அவசர சிகிச்சைக்காக வான்படை உலங்குவானூர்தி ஒன்றில் ஓமந்தையில் இருந்து கொண்டு செல்லப்பட்டார். இவர் இலங்கை வான்படையினரால் தடுத்து வைக்கப்பட்டிருக்கலாம் என நம்பப்படுகின்றது.

போர்ப் பகுதிகளில் இடம்பெற்ற ம்க்களுடைய மரணங்கள் தொடர்பான தகவல்களை வெளிநாட்டு ஊடகங்கள் மற்றும் ஐ.நா., மனித உரிமைகள் அமைப்புக்கள் போன்றவற்றுக்கு கொடுத்தமையால் அரசாங்கம் இவர்கள் மீது கடும் சீற்றமடைந்திருந்தது. இதற்காக இவர்கள் தடுப்புக்காவலில் பழிவாங்கப்படலாம் என்ற அச்சத்தை அனைத்துலக மன்னிப்புச் சபை இப்போது வெளியிட்டிருக்கின்றது. (50)

# தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யும் அரசியல் தீர்வு ஒன்றை முன்வைக்க வேண்டும்

## ஐரோப்பிய ஒன்றியம் அரசிடம் வலியுறுத்து

ஜெனீவா, மே 21

தமிழ் மக்களின் அபிலாசைகளைப் பூர்த்திசெய்யக்கூடிய அரசியல் தீர்வுத் திட்டம் ஒன்றை முன்வைக்குமாறு ஐரோப்பிய ஒன்றியம் இலங்கைக்கு கடந்த செவ்வாய்க்கிழமை அழைப்பு விடுத்துள்ளது.

தெற்காசிய விவகாரங்களுக்கான குழுவின் தலைவர் றொபேட் இவன்ஸ் புருசல்ஸ்சில் வெளியிட்ட அறிக்கையில் அவசியமான நீண்டகால அபிவிருத்தியையும் சுமூகமான எதிர்காலத்திற்கும் இது அவசியம் என தெரிவித்துள்ளார்.

ஆயிரக்கணக்கான பொதுமக்கள் கொல்லப்பட்டதற்கு இலங்கை அரசாங்கத்தையும் விடுதலைப்புலிகளையும் அவர் சாடியுள்ளார். இரு தரப்பினரதும் நடவடிக்கை மன்னிக்க முடியாது எனவும் இலங்கை அரசாங்கம் வடக்கு பகுதியில் உள்ள மக்களுக்கு எதிராக கொடூரமாக நடந்துகொண்டது எனவும் விடுதலைப்புலிகளை தமது மக்களையே பணயக்கைதிகளாகப் பாவித்ததாகவும் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு ஐரோப்பிய ஒன்றியம் முக்கிய கொடையாளி எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இலங்கை அரசாங்கம் தீர்வுத் திட்டம் ஒன்றை முன்வைக்கும் இடத்தில் நிபந்தனையடிப்படையில் உதவி வழங்கப்படும் எனவும் சிறுபான்மையினர்களின் உரிமையை மதித்து சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு நடப்பது சமாதான தீர்வுக்கு அவசியம் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (50)

# வவுனியாவில் உள்ள நலன்புரி முகாம்களில் ஐ.சி.ஆர்.சி. தொடர்ந்து பணியாற்றும்

கொழும்பு,மே21

வவுனியாவில் உள்ள நலன்புரி நிலையங்களில் வாழ்ந்து வரும் மக்களுக்கு அத்தியாவசிய சேவைகளை வழங்கும் நடவடிக்கைகளில் தொடர்ந்தும் ஈடுபடப் போவதாக செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு தெரிவித்துள்ளது.

மன்னார் மற்றும் வவுனியா வைத்தியசாலைகளின் அடிப்படை வசதிகளை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் மன்னார் வைத்தியசாலையில் தமது விசேட குழு ஒன்று வைத்திய பணிகளில் உதவிகளை செய்து வருவதாகச் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் ஊடக இணைப்பாளர் சரசி விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

இடம்பெயர்ந்த மக்களில் 17 ஆயிரத்து 300 பேருக்கு தற்காலிக குடியிருப்புகளையும், 20 ஆயிரத்து 700 பேர் பயன்படுத்தக் கூடிய வகையில் கழிவறை வசதிகளையும் பெற்றுக் கொடுத்துள்ளதாகவும் விஜேரத்ன மேலும் குறிப்பிட்டுள்ளார். (50

## நாளை

| | |
|---|---|
| வைகாசி 08 | 22.05.2009 |
| | வெள்ளிக்கிழமை |
| திதி: | திரயோதசி |
| | மு.இ.10.00வரை |
| நட்சத்திரம்: | அச்சுவினி |
| | மு.இ.09.19 வரை |
| சுபநேரம்: | 5.52 - 07.22 |
| ராகுகாலம்: | 10.22 - 11.52 |

# 453 நோயாளர் மன்னார் வைத்தியசாலையில்

வவுனியா, மே 21

வன்னியில் இடம்பெற்ற மோதல் சம்பவங்களின் போது காயமடைந்து திருகோணமலை பதவியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த மேலும் ஒரு தொகுதி நோயாளர்கள் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை மன்னார் பொது வைத்தியசாலைக்கு அழைத்து வரப் பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் காலை முதல் மாலைவரை பதவியா வைத்தியசாலையில் இருந்து 453 நோயாளர்கள் மேலதிக சிகிச்சைகளுக்காக அம்புலன்ஸ் வண்டிகள் மற்றும் பேரூந்துகள் மூலம் அழைத்து வரப்பட்டுள்ளனர்.

இவர்களில் அதிகமானோர் பாரிய அளவில் காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.இதனால் வைத்தியசாலையில் இடப்பற்றாக்குறை நிலவி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று நன்கு குணமடைந்த மேலும் 46 பேர் மன்னார் -தலைமன்னார் பிரதான வீதியில் அமைக்கப்பட்ட ஆங்கில பயிற்சிக் கல்லூரிக்கு மாற்றப்பட்டுள்ளனர். இதுவரை வைத்தியசாலையில் குணமடைந்த சுமார் 200 வன்னி நோயாளர்கள் வரை ஆங்கில பயிற்சி கல்லூரிக்கு இடம்மாற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (50)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நவீல்ட் செவிப்புலன் விழிப்புலன் இழந்தோர் பாடசாலை, கைதடி

பேராயர் அதிவண. டுலிப் டி சிக்கேரா ஆண்டகையினால் கைதடி நவீல்ட் விழிப்புலன் செவிப்புலன் வலுவற்றோர் பாடசாலையின் புதிய அதிபராக திரு.V.S.மகேந்திரன் B.Sc.,(Dip.in Edu.) அவர்களை பதவிக்கமர்த்தும் வழிபாட்டில் கலந்து கொள்ள அழைக்கிறோம்.

காலம் :- 22.05.2009 வெள்ளிக்கிழமை
நேரம் :- காலை 9.30 மணிக்கு

பழைய மாணவர், பெற்றோரினால் அன்பளிப்புச் செய்யப்பட்ட புதிய நுழைவாயில், பெயர்பலகை காலை 9 மணிக்கு பேராயரினால் திறந்து வைக்கப்படும்.

யாவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நவீல்ட் பாடசாலை,
கைதடி.

மாணவர்கள், ஆசிரியர்கள்,
பெற்றோர், பழைய மாணவர்கள்.

## மரண அறிவித்தல்

### கந்தையா பரராசசிங்கம்

(ஓய்வு பெற்ற ஊழியர், இலங்கை மின்சார சபை)



அரியாலையைச் சேர்ந்த கந்தையா பரராசசிங்கம் நேற்று (20.05.2009) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - உமையவல்லி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - யோகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், சந்தான லட்சுமியின் அன்புக் கணவரும், கஜனின் பாசமிகு தந்தையும், கஜேந்தினியின் மாமனும், நாராயணியின் அன்புப் பேரனும் சுப்பிரமணியம், புவிராசசிங்கம், காலஞ்சென்றவர்களான சோதிலிங்கம், கமலாம்பிகை, பேரின்பநாதன் மற்றும் புஸ்பராணி, யோகாம்பிகை, பாலாம்பிகை ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற கமலராணி மற்றும் சோமாவதி சிவபாக்கியம், சி.நடராசா, பொ.நடராசா, இலங்கேஸ்வரன், சுரேந்திரா, பேராசிரியர் மோகனதாஸ், சங்கரதாஸ், குகதாஸ், லலிதாதேவி, சிவதாஸ், கமலாதேவி, ஹரிதாஸ், கணேசதாஸ், விஜிதா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.05.2009) வியாழக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக பி.ப. ஒரு மணிக்கு அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

863, நாவலர் வீதி, அரியாலை. தகவல்: மனைவி.

## வினைத்திறன்காண் பரீட்சை முடிவுகள் வெளியாகின

யாழ்ப்பாணம், மே 21

அரச அலுவலகங்களில் கடமையாற்றும் நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்களுக்கிடையே கடந்த வருடம் நடத்தப்பட்ட முதலாவது வினைத்திறன்காண் பரீட்சை முடிவுகள் நேற்று முன்தினம் வெளிவந்துள்ளன.

பரீட்சைப் பெறுபேறுகள் சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கும் அலுவலகங்களுக்கும் மாகாண பொதுநிர்வாக அலுவலகத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை இப் பரீட்சையில் சித்தி பெறாத அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாகவும், விண்ணப்பங்களை எதிர்வரும் 29 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (203-207)

## கணனி இளமாணிப்பட்ட பயிற்சிக்கான கருத்தரங்கு

யாழ்ப்பாணம், மே 21

உயர்கல்வி அமைச்சின் அனுசரணையுடன் பொறியியல் கணனி இளமாணிப்பட்டப் பயிற்சிகளுக்கான கருத்தரங்கு நாளை மறுதினம் சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

பொறியியல் பீடாதிபதியும் பொறியியல் பேராசிரியருமான வி.எஸ்.இராஜரத்தினம் தலைமையில் இக் கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

மேற்படி பயிற்சிகளுக்கு உயர்கல்வி அமைச்சின் தொலைக்கல்வி நவீனமயமாக்கல் திட்டத்தின் ஒரு பங்காளரான யாழ். விஞ்ஞான தொழில்நுட்பப் பல்கலைக்கழகம் புதிய இளமாணிப் பொறியியல், கணனி அங்கீகரிக்கப்பட்ட பெறுமதி மிக்க சான்றிதழ்களை வழங்கவுள்ளது.

மேற்படி பயிற்சிகளுக்கான பதிவுகளும் அன்றைய தினத்தில் மேற்கொள்ளப்படவுள்ளது.

உயர்தர மாணவர்கள், பல்கலைக்கழகம் செல்ல முடியாமல் உயர்கல்வி வாய்ப்புக்களை எதிர்பார்த்து இருப்பவர்கள் மற்றும் துறைசார்ந்த கல்விமான்கள் ஆகியோரை கருத்தரங்கில் கலந்து கொள்ளுமாறு கேட்கப்படுகிறது.

(203-201)

## மரண அறிவித்தல்



### முருகுப்பிள்ளை தெய்வேந்திரன்

கொக்குவில் கிழக்கு, நந்தாவிலைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட முருகுப்பிள்ளை தெய்வேந்திரன் 18.05.2009 அன்று லண்டனில் காலமானார். அன்னார் கலைவாணியின் (கலா) அன்புக் கணவரும் காலஞ்சென்ற முருகுப்பிள்ளை - அழகம்மா (நந்தாவில்) தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற காந்தரத்தினம் - சிவகாமசுந்தரி (வட்டுக்கோட்டை) தம்பதிகளின் அன்பு மருமகனும், இந்திராணி, சண்முகரட்ணம் புவனராணி, குமரேந்திரன், கலாராணி, சர்வேந்திரன், ராஜேந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், சச்சிதானந்தன், சிவமலர், காலஞ்சென்ற பரமேஸ்வரன் மற்றும் கமலினி, ராஜகருணா, பவானி, சுபாசினி ஆகியோரின் அன்பு மைத்துனரும் செந்தில் சிவகாந்தன், ராஜகௌரி ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 25.05.2009 திங்கட்கிழமை லண்டனில் நடை பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி கலைவாணி (கலா), 0208 - 6465772 லண்டன்.
இந்திராணி சச்சிதானந்தன் (சகோதரி) 011- 4942311 கொழும்பு.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

### அமரர் சுப்பையா சண்முகராசா

### இளைப்பாறிய அதிபர்



மலர்வு: 19.09.1938

உதிர்வு: 21.04.2009

ஆறாத் துயரமையா வும் மீளாத் துயில் கண்டு
மாறாத விதியதனை வெல்லவும் முடியுமோ?
பாராளும் பரமனடி பணிந்தே வேண்டுகிறோம்
சீராள நீர் பெறுக சாந்தி!

செட்டிவளவு ஒழுங்கை,
இணுவில் மேற்கு,
இணுவில்.


சுப்பையா குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆனைக்கோட்டை கரைப்பிரான் ஆதிவிநாயகர் ஆலய

# தேர்த் திருவிழாச் சிறப்பு மலர் - 21.05.2009





## வரலாறு

தென்னிந்தியாவில் இருந்து இலங்கை வந்த சோழராஜ குமாரியாகிய மாருதப்புரவீகவல்லி குதிரைமுகம் நீங்கி, சாப விமோசனம் பெற்று, மாவிட்டபுரத்தில் அரசாட்சி செய்துவரும் நாளில் அவளோடு தென்னிந்தியாவில் சீர்காழியில் இருந்து வந்த அவளின் குடிமக்களாகிய சலவைத் தொழிலாளர்கள் சென்று தமது சலவைத் தொழிலை இடையூறு இன்றி மேற்கொள்ளவும் துணிகளைத் தோய்க்கவும், உலர்த்தவும் உகந்த இடம் தருமாறு அவளிடம் விண்ணப்பித்தனர். அதற்கு செவிசாய்த்த பட்டத்துராணி தனது பட்டத்து யானைக்கு முன்னே துணி விரித்து யானையைக் கொண்டு செல்லும்படியும் யானையின் காலில் எந்த இடத்தில் மண் ஒட்டவில்லையோ அந்த இடம் உங்களுக்கு உகந்த இடம் ஆகும். அதனை நாம் மானியமாக வழங்குவோம் என்றும் கூறினாள்.

அதன் பிரகாரம் பட்டத்து யானை எல்லா இடங்களையும் தாண்டி இவ்வூரில் வரும்போது அதன் கால்களில் மண் ஒட்டவில்லை என்பதாகவும் அதனால் இந்த ஊரை தான் கூறியவாறு சலவைத் தொழிலாளர்களுக்கு மானியமாக ராணி வழங்கியதாகவும் அறிகின்றோம். ஆனையின் காலில் மண் ஒட்டாத காரணத்தினால் ஆனை ஒட்டாத மண் நாளடைவில் மருவி ஆனைக்கோட்டை என்று வந்தது என்று கூறுவர். இதனைவிட தற்போதும் இவ்வூர் குடிமக்களே மாவிட்டபுரம் கந்தசாமி கோயிலுக்குத் தொண்டு புரிந்து வருவதும் இக்கூற்றை உறுதிப்படுத்துவதற்கு சிறந்த சான்றாக அமைகின்றது.

இவ்வாறு அங்கிருந்து வந்து தொழில் செய்து வரும்போது கடலும் கடல் சார்ந்த இடமும், வயலும் வயல் சார்ந்த இடமுமாகிய நெய்தல், மருதம் என்பவற்றின் கரையேயுள்ள இடத்தைத் தேர்ந்து எடுத்து விநாயகப் பெருமானை அதில் அமர்த்தி வழிபட்டு வந்ததாகவும், கரையில் அமைந்த பிரான் ஆகையால் கரைப்பிரான் என்று அடியவர்கள் விநாயகப் பெருமானை விரும்பி வழிபட்டு வருகின்றனர்.

முதலாவது ஆவணித் திருவோணத்தில் 1994 ஆம் ஆண்டு கும்பாபிஷேகம் நடைபெற்றது. அவரது திருவருளால் 1995ஆம் ஆண்டு ஆதி விநாயகப் பெருமானுக்கு அழகான சித்திரத் தேர் அமைத்து தொடர்ந்து சித்திரை சுவாதி நட்சத்திரத்தில் வரும் முதல் நாள் தொடங்கி 14 ஆம் நாள் தேர்த் திருவிழாவும், 15 ஆம் நாள் தீர்த்த உற்சவமும் நடைபெற்று வருகின்றது.

இவ்வருடம் சித்திரை சுவாதி நட்சத்திரத்தில் 14 ஆம் நாள் எம் பெருமான் சித்திரத் தேரில் இன்று வீதி வலம் வந்து பத்தர்களுக்கு அருள்பாலிப்பார்.

சோ.சிவகுமாரக்குருக்கள் ,தேவஸ்தானக் குரு.

## துயரங்கள் நீங்கிட ஊர் கூடி வடம்பிடித்து தேர் இழுப்போம்



வயலும் வயல் சார்ந்த இடமாகிய மருதம், கடலும் கடல் சார்ந்த இடமாகிய நெய்தல் ஆகிய இடங்களைத் தன்னகத்தே கொண்டு விளங்குவதும் புராதன வரலாற்றுப் பெருமை வாய்ந்ததுமான கரையிலே வீற்றிருந்து அருளாட்சி செய்வதினால் "கரைப்பிரான்" என்று காரணப் பெயர்கொண்டு விளங்குகின்ற ஆனையூர் மத்தி மக்களின் குல தெய்வமாக விளங்கி வருகின்றவரும் தனக்கு மேலே ஒரு தலைவன் இல்லாதவனுமாகிய "விநாயகப் பெருமானுக்கு" இன்று ஆனந்தத் திருவிழா. தேர்த்திருவிழா ஆரம்ப காலத்தில் சிறு ஆலயமாக விளங்கிய இக்கோயில் அடியவர்களின் அயராத ஒத்துழைப்பு, விடா முயற்சி, தளராத பக்தி என்பவற்றின் காரணத்தினால் இன்று சமய, சமூக சேவைகளை ஆற்றுகின்ற ஆலயமாக விளங்குகின்றது. அப்படிப்பட்ட விநாயகப் பெருமானுக்கு எல்லோரது முயற்சியின் காரணத்தினால் ஏறத்தாழ ஒரு தசாப்த காலத்தின் முன் அன்பர்கள், அடியவர்கள் யாவராலும் உருவாக்கப்பட்ட அழகிய சித்திரத் தேரில் பஞ்சமுக விநாயகப் பெருமானை அமர்த்தி "ஊர் கூடித் தேர் இழுத்தல்" என்ற வாக்கு பொய்யாத வண்ணம் ஊர் மக்கள் அனைவரும் கூடி வடம் பிடித்து, பெருமானின் தேரை இழுத்து தமது துன்ப துயரங்களை நீக்கி அருள்புரிய வேண்டுமென்று பிரார்த்திக்கின்றனர்.

எனவே எல்லாம் வல்ல பஞ்சமுக விநாயகப் பெருமான் அடியவர்கள் அனைவரின் துன்ப, துயரங்களை நீக்கவும், நாட்டில் நிரந்தர சாந்தியும் சமாதானமும் ஏற்பட அருள்புரிய வேண்டும். அருள்புரிவார் என்ற நம்பிக்கையுடன் கரம் குவித்து நிறைவு செய்கின் றேன்.

"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்"

-சிவஸ்ரீ சோம.சிவகுமாரக் குருக்கள்.


**விழாச் சிறப்புற வாழ்த்துவோர்:**

| | | | | |
|---|---|---|---|---|
| சரவணன் கட்டட உபகரணங்கள் விற்பனையாளர்கள்<br>மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டைச் சந்தி.<br>தொலைபேசி இல: 077 3960345 | BEST ONE COMMUNICATION AND FANCY HOUSE<br>மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டை. | பிடாரி களஞ்சியம்<br>பல்பொருள் வாணிபம்,<br>புதினப் பத்திரிகை விநியோகஸ்தர்<br>இல.8, வராகி கோயில் வீதி,<br>கொக்குவில் மேற்கு, கொக்குவில். | தயாளினி வீடியோ சென்ரர் அன் பான்சி கவுஸ்<br>பிடாரி கோயிலடி,<br>ஆனைக்கோட்டை. | S.X.களஞ்சியம்<br>பல்பொருள் வாணிபம்<br>கராச்சடி,<br>ஆனைக்கோட்டை. |
| றூபன் பிறிண்டேர்ஸ்<br>உரிமையாளர் - சி.சிவரூபன்,<br>மானிப்பாய் வீதி,<br>ஆனைக்கோட்டை. | மானிப்பாய் கோவிற்பற்று ப.நோ.கூ.சங்கம் (வ-து),<br>மானிப்பாய்.<br>உள்ளூர் தொ.பே.இல.: 021 222 4511<br>வெளியூர் தொ.பே.இல.: 0094 21222 4511 | சந்திரா ஸ்ரோர்ஸ்<br>பல்பொருள் வாணிபம்,<br>புதினப் பத்திரிகை விநியோகஸ்தர்<br>வண்.வடமேற்கு, ஆனைக்கோட்டை. | மேதிகா நகைப்பூங்கா<br>மானிப்பாய் வீதி,<br>ஆனைக்கோட்டைச் சந்தி. | R.S.ரயர் வேக்ஸ்<br>மானிப்பாய் வீதி,<br>ஆனைக்கோட்டை. |


# உலகில் மிகப் பயங்கர ஆயுதம் ஊடகத்துறை

## கெஹலிய ரம்புக்வெல கூறுகிறார்

கொழும்பு,மே21

ஊடகத்துறையே உலகிலுள்ள மிகவும் பயங்கரமான ஆயுதமாகும். இலங்கையில் பயங்கரவாதத்தைத் தோற்கடிப்பதில் இந்த ஊடகங்கள் அளப்பரிய பங்கை வகித்துள்ளன என தேசிய பாதுகாப்புக்கான ஊடகப் பேச்சாளரும் அமைச்சருமான கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அமைச்சர் அங்கு மேலும் கருத்துத் தெரிவிக்கையில் கூறியவை வருமாறு -

மாவிலாறில் ஆரம்பிக்கப்பட்ட மனித நேய இராணுவ நடவடிக்கை தொடர்ந்தும் உறுதியுடன் முன்னெடுக்கப்பட்டதால் இந்த அபார வெற்றி கிடைத்துள்ளது.

விடுதலைப் புலிகள் அமைப்புக்கு உதவியளித்துக்கொண்டு சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் இலங்கையை ஒரு விளையாட்டுத் திடலாகப் பயன்படுத்தினர். பிரபாகரனை ஒரு மாபெரும் வீரனாகவும் இலங்கை அரசை மோசமாகவும் விமர்சித்த அந்த நிறுவனங்களுக்கு சரி யான பதில் கிடைத்துள்ளது.

வடக்கில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தை நோக்கி படையினர் மேற்கொண்ட தீவிர முன்னேற்ற முயற்சியின்போது 62ஆயிரம் பொதுமக்களும் மீட்கப்பட்டனர்.

இந்நிலையில் அப்பகுதியில் எஞ்சியிருந்த புலிகள் அனைவரும் சுமார் 300 சதுர மீற்றர் நிலப்பரப்புக்குள் முடக்கப்பட்டனர்.

இதனையடுத்து விடுதலைப் புலிகளுக்கு எதிரான போர் நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டன. அதில் 300இற்கும் மேற்பட்ட விடுதலைப் புலி உறுப்பினர்கள் கொல்லப்பட்டனர்.

அவர்களது சடலங்களுக்குள்ளேயே விடுதலைப் புலிகளின் தலைவருடைய சடலமும் காணப்பட்ட நிலையில் படையினர் அடையாளம் கண்டுள்ளனர்.

படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இடம்பெற்ற மோதல்களின்போது புலிகளின் தலைவர் கொல்லப்பட்டார். இருப்பினும் அவரது சடலம் கண்டுபிடிக்கப்பட்டு படையினரால் அடையாளம் காணப்பட்டது.

படையினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டிலேயே அவர் கொல்லப்பட்டுள்ளார் என்று களமுனையிலுள்ள படையினர் உறுதி செய்துள்ளனர்.

உரிய சட்டமுறைமைகளுக்கு அமைய பிரபாகரனின் சடலம் என உறுதி செய்யப்பட்டுள்ளது. மரபணுப் பரிசோதனை நடத்துமாறு சில தரப்புகள் கோரிக்கைகளை விடுத்துள்ளன. அந்த கோரிக்கை அரசால் பரிசீலிக்கப்பட்டு தேவை ஏற்படின் மேற்கொள்ளப்படும் - என்றார். (சி)

# உணவு விஷமாகியதில் 50 மாணவர்கள் பாதிப்பு

## அனுராதபுரத்தில் சம்பவம்

கொழும்பு,மே21

அனுராதபுரம் - கெக்கிராவை மொர கொல்லாகம பகுதியிலுள்ள உள்ள பாடசாலை ஒன்றில் மாணவர்கள் உட்கொண்ட உணவு விஷமாகியதால் 50 பேர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் பிற்பகல் இடம்பெற்றுள்ளது என கெக்கிராவை பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி ஜயந்த விஜயசூர்ய தெரிவித்தார்.

குறித்த மாணவர்கள் உட்கொண்ட உணவு மற்றும் தண்ணீர் ஆகியவற்றின் மாதிரிகளை பரிசோதனைக்காக கொழும்பிற்கு அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

அத்துடன், சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை தாம் மேற்கொண்டு வருகின்றனர் என கெக்கிராவைப் பொலிஸார் குறிப்பிட்டனர். (சி)

# கடவுளை எப்படித் திருப்தி செய்யலாம்?

உயிருடன் தன்னருகே இருக்கும் உருவமுடைய தாய், தந்தையரை மதிக்காத எவனாலும் உருவமற்ற குணங்களுக்கு அப்பாற்பட்ட இறைவனை நேசிக்கவே முடியாது. பெற்றோரைத் திருப்தி செய்யாத எவனாலும் உருவமற்ற குணங்களுக்கு அப்பாற்பட்ட இறைவனை நேசிக்கவே முடியாது. பெற்றோரைத் திருப்தி செய்யாத எவனாலும் இறைவனைத் திருப்தி செய்யவே முடியாது.

ஒவ்வொரு மகனும், மகளும் தம் பெற்றோர் அவர்களிடம் இருந்து என்ன விரும்புகின்றனர் என்று தெரியும். அதனை நிறைவேற்றி அவர்களைத் திருப்தி செய்வது மகனோ அல்லது மகளோ ஒவ்வொருவருடைய கடமையாகும். அதனை விடுத்து உன்னால் எட்டமுடியாத நிலையில் இருக்கும் இறைவனை வழிபடுவது என்பது வியர்த்தமானது. இறைவனுக்கு எது பிரியமானது?எதைச்செய்தால் அவர் திருப்தியும் மகிழ்ச்சியும் அடைவார்? என்பதைப் புரிந்துகொள்ளவேண்டும். அதனால் தெய்வ அனுக்கிரகம் பெறும் வழிமுறைகளையும், எதைச்செய்தால் அவருக்கு திருப்தி ஏற்படுமோ அவற்றைத் தெரிந்துகொள்ளல் அவசியம். தனிப்பட்ட அனுபவங்களாலும் உணர்வுகளாலும் மட்டுமே இத்தகைய உன்னதமான வழிமுறைகளையும் அடைய முடியும். உண்மையான அன்பின் வடிவம் தாய்மட்டுமே. அவளது அன்பைப் பெற நாம் முயலவேண்டும். அவளது விருப்பங்கள் என்ன என்பதைப் புரிந்துகொள்ளவேண்டும். அவள் மகிழ்ச்சியாக இருக்கும்படி செய்வதற்கான முயற்சியிலும் ஈடுபடுவது அவசியம். இதுதான் பிறந்த ஒவ்வொரு குழந்தைக்கும் முக்கியமான கடமை.



சாயி சிந்தனை

# பிரபாகரன் உயிரிழக்கவில்லை என கூறுவோருக்கு அவரின் கதிதானாம்

## ஊடக அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு,மே21

விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் உயிரிழக்கவில்லை என்று இன்னும் சிலர் வெளிநாடுகளில் இருந்தவாறு கூறிக் கொண்டிருக்கின்றனர். அவர்கள் அனைவருக்கும் ஒன்றைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அதாவது, இதற்குப் பின்னரும் புலிகளுக்கு ஆதரவாகப் பேசுபவர்களுக்கும் புலிகளின் தலைவர்களுக்கு நேர்ந்த கதிதான் ஏற்படும். இதனை மறந்துவிடக்கூடாது.

- இவ்வாறு அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான அனுர பிரியதர்ஷன யாப்பா தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு-

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பாதுகாப்பு செயலாளருடன் இணைந்து முப்படைகளை சிறப்பாக வழிநடத்தி முப்பது வருடங்கள் நாட்டுக்கு அச்சுறுத்தலாக விளங்கிய பயங்கரவாதத்தை இரண்டு வருடங்கள் இரண்டு மாதங்களில் முற்றாக ஒழித்துள்ளார்.

எனது இளமைக் காலத்தில் அரசியல் தலைவர்கள், பாதுகாப்பு அதிகாரிகள் முக்கியமாக சிவிலியன்களை புலிகள் கொலை செய்தனர். மாற்றுக் கருத்துக்கு இடமளிக்கவில்லை. தமிழ் மக்களுக்கே துரோகம் இழைத்தனர்.

இன்னும் புலிகளுக்கு சிலர் வக்காலத்து வாங்குவதாகவே தெரிகிறது. பிரபாகரன் இன்னும் உயிரிழக்கவில்லையென சர்வதேச மட்டத்தில் சிலர் தெரிவித்துள்ளனர். இதற்குப் பின்னரும் புலிகளுக்கு ஆதரவாக யாராவது செயற்பட்டால் அவர்களுக்கும் இதேகதிதான் ஏற்படும் - என்றார். (சி)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## தரம் - 05 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான

### வினாத்தாள் - I

நேரம்: 45 நிமிடங்கள்

- எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடை எழுதுக.
- பின்வரும் வினாக்களுக்கு சரியான விடையின் கீழ்க்கோடிடுக.

01. புகைத்தல் உடலுக்கு பாதகமானது என்பதை அறிந்திருந்தும் மனிதர்கள் கொண்ட பழக்கத்தை கைவிடத் தயங்குவதினால் புகைக்கின்றனர். இதில் காட்டப்பட்டுள்ள கருத்து பின்வருவனவற்றுள் எது ஆகும்?
   1) பழகப் பழக பாலும் புளிக்கும். 2) முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்.
   3) தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்.
   4) ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?
   5) தினை விதைத்தவன் தினை அறுப்பான், வினை விதைத்தவன் வினை அறுப்பான்.

02. பின்வரும் கூற்றின் ஒத்த கருத்தைத் தரும் கூற்றைத் தெரிவு செய்க.
   வரட்சி அதிகரிக்கிறது, நீத்தட்டுப்பாடு உக்கிரமாகிறது.
   1) இரக்கம் அதிகரிக்கிறது. நிவாரணம் கிடைக்கிறது.
   2) மழை பெய்கிறது, ஆறு நிரம்புகிறது.
   3) உலகம் மாறுகிறது, சுகம் கிடைக்கிறது.
   4) சேவல் கூவுகின்றது, சூரியன் உதிக்கின்றது.
   5) ஆகாயம் மேலே, தரை கீழே.

03. பின்வரும் சிறு பந்தியுடன் அதிலுள்ள கருத்தை அடிப்படையாகக்கொண்டு உருவாக்கப்பட்ட இரு கூற்றுக்கள் A, B தரப்பட்டுள்ளன. அவ்விரு கூற்றுக்கள் தொடர்பாகதரப்பட்டுள்ள விடைகளில் திருத்தமான விடையைத் தெரிவுசெய்க.
   பந்தி
   மனிதனிடம் இருந்து தனது தேவைகளை திருப்தி செய்யும் ஆசையைப் பிரிக்கமுடியாது. ஆகவே, மனிதன் வாழ்க்கைத்தேவைகளை திருப்தி செய்யும் முயற்சியில் தங்கி உள்ளது. இதற்குக் காரணம் மனித வாழ்க்கைத் தேவைகள் நிறைந்ததாக இருக்கின்றமையாகும்.
   கூற்றுக்கள்:
   A - மனிதன் வாஞ்சைமிக்கவன்
   B - வாழ்க்கை பொருட்களின் நுகர்ச்சியில் தங்கியுள்ளது.
   1) A மெய் B பொய். 2) B மெய் A பொய். 3) A மெய் B மெய்.
   4) A பொய் B பொய்.
   5) A, B இரண்டும் ஒருமித்து கூறப்படும்போது மெய்யானவை.

04. தொடர்பற்ற சோடிகளைத் தெரிவு செய்க.
   1) கனவளவு - லீற்றர். 2) காலம் - செக்கன். 3) நீளம் - மீற்றர்.
   4) அமுக்கம் - பாரமானி. 5) நிறை - கிராம்.

05. தொடர்பற்ற சோடிகளைத் தெரிவு செய்க.
   1) பயமற்ற - பயப்படும். 2) அலங்காரம் - அழகு. 3) தெளிவு - சிக்கல்.
   4) தேசிய - அன்னிய. 5) உத்தம - தாழ்ந்த.

06. இல, 6ஆம், 7ஆம், 8ஆம் வினாக்கள் பின்வரும் தகவலை அடிப்படையாகக் கொண்டவை. லீலா, நீலா, கலா, மீரா, மாலா, மீனா, கீதா என்ற ஏழு பேரும் வட்டமாக இருந்து சாப்பிடுகின்றனர். மீனா, கீதாவிற்கு வலப்பக்கத்தில் இரண்டாவதாக இருக்கின்றார். நீலா, கலாவிற்கு கிட்டவன்றி மீனாவிற்குக்கிட்ட இருக்கின்றார். கலாவிற்குக்கிட்ட இருக்கும் மாலா, கீதாவிற்கு வலப்பக்கத்தில் மூன்றாவதாக இருக்கின்றார். மீரா, லீலாவிற்கும் கலாவிற்கும் இடையே இருக்கின்றார்.
   கீதாவிற்குக்கிட்ட இடப்பக்கத்தில் இருப்பவர் யார்?
   1) மீரா. 2) லீலா. 3) கலா.
   4) மீனா. 5) மாலா.

07. நீலாவின் இடப்பக்கத்தில் நான்காவதாக இருப்பவர் யார்?
   1) லீலா. 2) மீனா. 3) கலா.
   4) மாலா. 5) கீதா.

08. கலாவிற்குக்கிட்ட இருக்கும் மாலா, கீதாவிற்கு வலப்பக்கத்தில் மூன்றா க இருக்கின்றாள். மீரா, லீலாவிற்கும், கலாவிற்கும் இடையே இருக்கின்றாள். கீதாவிற்கு அண்மையில் இடப்பக்கத்தில் இருப்பவர் யார்?
   1) மீரா. 2) லீலா. 3) மீனா.
   4) மாலா. 5) கலா.

09. சிறுவர் நலனுடன் தொடர்புடைய ஐக்கிய நாடுகள் நிறுவனம்,
   1) உங்ராட். 2) யுனிசெவ். 3) நேட்டே.
   4) சப்றா. 5) யுனெஸ்கோ.

10. இலங்கையில் கடதாசிச் தொழிற்சாலை அமைந்துள்ள இடம்,
   1) யாழ்ப்பாணம். 2) கொழும்பு. 3) எம்பிலிபிட்டிய.
   4) பரந்தன். 5) நீர்கொழும்பு.

11. முகச்சவரம் செய்வதற்கும் தலைமயிர் வெட்டுவதற்குமாக ஒவ்வோர் அணியிடமிருந்தும் வரியை அறவிடுவதற்கு யாதாயினும் ஓர் அரசு தீர்மானித்தால், ஏற்படக்கூடுமென கருதத்தக்க சில விளைவுகள் கீழே தரப்பட்டுள்ளன.
   A - ஆண்கள் பலர் முகச்சவரம் செய்வதையும் தலைமயிர் வெட்டுவதையும் கைவிடல்.
   B - இத்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களின் வருமானம் குறைதல்.
   C - சவரக்கத்தி, சவர அலகு போன்ற உபகரணங்களை இறக்குமதி செய்வதற்கு செலவிடப்படும் அந்நியச் செலாவணியை வேறு பணிகளுக்கு பயன்படுத்தத் தக்கதாக இருக்கின்றமை.
   D - தாடி, தலைமயிர் ஆகியவற்றை வளர்ப்பவர்களும் வெட்டுபவர்களும் தனித்தனியாக அரசுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளல்.
   ஏற்படக்கூடுமென கருதப்படும் மேற்குறித்த விளைவுகளிடையே உண்மையில் மிக விரைவாக ஏற்படத்தக்க விளைவுகளை கொண்ட விடை யாது?
   1) A, C 2) C, D 3) A, B
   4) B, D 5) A, D

12. சுற்றாடல் வெப்பநிலைக்கு ஏற்ப உடல் வெப்பநிலையை மாற்றும் விலங்கு யாது?
   1) பாம்பு. 2) நாய். 3) கரடி.
   4) புலி 5) திமிங்கலம்.

13. சுற்றாடலின் வெப்பநிலைக்கு ஏற்ப உடல் வெப்பநிலையை மாற்றாத விலங்கு?
   1) பாம்பு. 2) தவளை. 3) முதலை.
   4) ஓணான். 5) சிங்கம்.

14. குருதிச் சுற்றோட்டத்தை கண்டுபிடித்த விஞ்ஞானி,
   1) லூயி பாஸ்ரர். 2) வில்லியம் ஹார்வே. 3) மேரி கியூரி.
   4) ஐசாக் நியூட்டன். 5) கான் பெப்பர்.

15. கல்வி, விஞ்ஞானம், பண்பாடு ஆகிய துறைகளில் தொடர்புடைய பணிபுரியும் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம்,
   1) உங்ராட். 2) சியாற்றோ. 3) சப்தா.
   4) யுனிசெப். 5) யுனெஸ்கோ.

16. பிழையான சோடியைத் தெரிவு செய்யவும்.
   1) பல்லி - கத்தும். 2) மயில் - அகவும். 3) நாய் - குரைக்கும்.
   4) ஆடு - கத்தும்.


17. விண் - 12, காகம் - 354, கடகம் - 5654 எனில்,
   15651 இச்சொல்லின் கருத்து யாது? ..........................

18. பை (வட்டவரைபு) வரையைப் பயன்படுத்தி கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடை தருக.
   சிறுகுற்றம் முழுவதின் எந்த அளவு?
   ..........................
   சிறு குற்றத்தால் உண்டாக்கப்படும் கோணத்தின் அளவு யாது?
   ..........................





19. தவறு அமைக்கும் கோணம் யாது? ..........................

20. பின்வரும் சலாகைக்கோட்டு வரைபுகளை பயன்படுத்தி கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடை தருக.




வினாப்பத்திரம் I




வினாப்பத்திரம் II


21. இரு வினாப்பத்திரத்திலும் 20 புள்ளிக்கு மேல் பெற்றவர்கள் சித்தி அடைந்தவர்கள் எனின், பரீட்சைக்கு யார் யார் சித்தி பெறுவார்கள்? ..........................

22. இரு வினாப்பத்திரத்திலும் 1:2 என்ற விகிதத்தில் புள்ளிகள் பெற்றது யார்?
   ..........................


23. இரு வினாப்பத்திரத்திலும் கூடிய புள்ளிகள் பெற்றது யார்? ..........................

24. சமமான கூட்டுத்தொகை பெறும் மாணவர்கள் யார்?
   ..........................

25. கீழ்த்தரப்பட்ட வரைபுகளில் டிஜிற்றல் வரைபு யாது? (கோடு இடுக) ..........................
   1) 2) 3)




26. வட்டம் இடஞ்சுழியாகவும் வலஞ்சுழியாகவும் சுற்றினால் இரண்டும் எப்புள்ளியில் சந்திக்கும்?




27. இப்பரிசோதனை எதனைக்காட்டுகின்றது? ..........................




28. சரியான விடையின் கீழ்க்கோடிடுக.




   1) 30[illegible] 2) 308
   3) 321 4) 348 5) 356

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வலி. தெற்கு பிரதேச சபையால் உலக புத்தக தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட இலக்கிய விழாவில் எடுக்கப்பட்ட படங்கள்.
எழுத்தாளர் கே.எஸ்.ஆனந்தன் குமாரசாமிப் புலவரின் சிலைக்கு மாலை அணிவிப்பதை முதலாவது படத்திலும் நிகழ்வில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரை இரண்டாவது படத்திலும் காணலாம்.
நிகழ்வில் கலை ஞானப் பொழில் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்ட 'சிற்பி' சிவசரவணபவன் பதிப்புச் சுடர் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்ட சி.சதாசிவம், கலைச்சுடர் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்ட பிரதேச எழுத்தாளர்களான கே.எஸ். ஆனந்தன், பண்டிதர் இராமு சுப்பிரமணியம், கலாபூசணம் பொ.சண்முகநாதன், அ.தம்பித்துரை, திருமதி எம்.இந்திராணி, பண்டிதை வை.கணேசபிள்ளை ஆகியோரை மூன்றாவது படத்தில் காணலாம். (படங்கள்: லிங்கம்)

## மோட்டார் சைக்கிள் விபத்தில் நான்கு பேருக்கு காயம்

வலி.வடக்கு, மே 21

இரண்டு மோட்டார் சைக்கிள்கள் ஒன்றுடன் ஒன்று மோதிக் கொண்டதில் இரண்டு பாடசாலைச் சிறுவர்கள் உட்பட நால்வர் காயம் அடைந்துள்ளார்கள்.

ஏழாலையில் இடம்பெற்ற இந்த விபத்தில் தலை,கை,கால்களில் காயம் அடைந்த சிறுமி ஒருவர் தெல்லிப்பழை மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். ஏனைய மூவரும் சிறுகாயங்களுக்கு ஆளாகினர். (203-86)

## நீர்வேலியில் நாய்களுக்கு விசர்நோய்த்தடுப்பூசி

யாழ்ப்பாணம், மே 21

நீர்வேலி,கோப்பாய் பிரதேசத்தில் உள்ளவளர்ப்புநாய்களுக்கு விசர்நோய்க்கான தடுப்பூசி மருந்துகள் ஏற்றும்பணிகள் இடம்பெற்று வருகின்றன.

யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தினரால் ஒவ்வொரு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு உட்பட்ட பிரதேசத்தில் உள்ள வளர்ப்பு நாய்களுக்கு இந்த விசர் நோய்க்கான தடுப்பூசிகள் ஏற்றப்பட்டு வருகின்றன. (203- 224)

## வல்லிபுர ஆலயச் சூழலில் அனுமதியின்றி மணல் அகழ்வு

யாழ்ப்பாணம், மே 21

வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் ஆலயச் சூழலை அண்டிய பகுதியில் தொடர்ந்தும் மணல் அனுமதியின்றி ஏற்றப்பட்டு வருகிறது.

காலையிலும் மாலையிலும் மாட்டு வண்டிகள் மூலம் இப்பகுதிகளில் இருந்து மணல் ஏற்றப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது

மாட்டுவண்டியின் நான்கு பக்கமும் உரப்பை மற்றும் சாக்குகளினால் மறைத்துக் கட்டிவிட்டு அதற்குள் மணல் ஏற்றிச் செல்லப்படுகிறது என்று இப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (203-78)

## தெரிவுப் பரீட்சை

யாழ்ப்பாணம், மே 21

தேசிய கல்வி நிறுவகத்தால் நடத்தப்படும் கல்வி மாணிப்பட்ட நெறிக்கு புதிய மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான தெரிவுப் பரீட்சை எதிர்வரும் 30 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது

பரீட்சார்த்திக்கான் அனுமதி அட்டைகள் தேசிய கல்வி நிறுவகத்தால் தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக மேற்படி கல்வி நிறுவகத்தின் கல்விமாணிப்பட்ட நெறிக்கான யாழ். மாவட்ட இணைப்பாளர் இ.சத்தியேந்திரம்பிள்ளை அறிவித் துள்ளார். (201)

## வாராந்த சொற்பொழிவு

யாழ்ப்பாணம், மே 21

வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தின் வடக்கு வீதியில் அமைந்துள்ள பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் நடைபெற்றுவரும் வாராந்த நிகழ்வில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை ''திருமால் பெருமை'' என்னும் தலைப்பில் சொற்பொழிவு இடம்பெறவுள்து.

இந்தச் சொற்பொழிவினை சைவப் புலவர் ம.கணநாதன் நிகழ்த்தவுள்ளார்.

சொற்பொழிவு நிறைவுபெற்றதும் நண்பகல் 12 மணியளவில் அன்னதானம் இடம்பெறும். (203-78)

# நயினாதீவு - குறிகட்டுவான் சேவையிலுள்ள படகுகள் பயணம் செய்வதற்கு ஏற்ற நிலையில் இல்லை

## கடல்நீர் உட்புகுவதாக மக்கள் தெரிவிப்பு

நல்லூர், மே 21

நயினாதீவு-குறிகட்டுவான் சேவையில் உள்ள படகுகள் மிகவும் மோசமாகப் பாதிப்புக்கு உள்ளானதாக தெரிவிக்கப்படுகிறது.

கடல் நீர் உட்புகுந்த நிலையிலேயே படகுகள் பயணிகளை ஏற்றி இறக்கும் பணியில் ஈடுபட்டுள்ளன.

இதனால் பயணிகள் இந்த வழித் தடத்தில் அச்சத்துடனேயே தமது பயணத்தை மேற்கொள்ளவேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

படகின் உள்ளே இறங்கிச் செல்வதற்காக உள்ள படிக்கட்டுகளும் பழுதடைந்து காணப்படுகின்றன.

எந்தவேளையிலும் அவை முறிந்துவிழக் கூடியதாக உள்ளன.

இப்படகுகளில் அளவுக்கு அதிகமான பிரயாணிகளுடன் மோட்டார் சைக்கிள்கள், பொதிகள் என்பனவும் ஏற்றிச் செல்லப்படுகின்றன.

துறைமுகங்களில் நிறுத்தப்பட்டுள்ள படகுகளின் அண்மையிலேயே பயணிகள் படகும் நிறுத்தப்படுவதால் இந்தப் படகுகளில் ஏறிச்சென்றே பயணிகள் துறைமுகப் பகுதியில் இறங்க வேண்டியுள்ளது.

இதனால் முதியவர்கள், சிறுவர்கள் உட்பட பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

கடந்த மாதத்தில் பாடசாலை மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் உட்பட மிகக் கூடுதலான பயணிகளுடன் அளவுக்கதிகமான பொதிகளும் மோட்டார் சைக்கிள்களும் ஏற்றிச் சென்ற படகு ஒனறு நடுக்கடலில் கடல்நீர் உட்புகுந்த நிலையில் பெரிதும் அவஸ்தைக்குள்ளான சமயம் மற்றொரு படகு விரைந்து பயணிகளைக் காப்பாற்றியதாகவும் கூறப்படுகிறது.

நயினாதீவு மக்கள் நயினை நாகபூஷணி அம்பாள் ஆலய திருவிழா ஆரம்பமாகவுள்ள நிலையில் சேவைக்கு உகந்தது என சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் சான்றிதழ்கள் வழங்கப்பட்ட படகுகளை மட்டுமே சேவையில் ஈடுபட அனுமதிக்கப்பட வேண்டும்.

நயினாதீவு-குறிகட்டுவான் போக்குவரத்துக் குறித்து சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினரும் மக்களுக்கு பாதிப்பு ஏற்படாதவகையில் படகுச்சேவை இடம்பெற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (203-111)

## இன்றைய ஆட்டங்கள்

வலி .வடக்கு, மே 21

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி டாக்டர் டபிள்யூ.ஆ.கோம்ஸ் வெற்றிக் கிண்ணத்துக்கான யாழ்ப்பாணம் பாடசாலைகளின் ஆண்கள் பெண்களுக்கிடையே லீக் முறையில் நடைபெற்று வரும் கூடைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ள ஆட்டங்களின் மோதவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:

கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானம்- (ஆண்கள்)

* கொக்குவில் இந்துக்கல்லூரி எதிர் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி

யாழ்ப்பாணம் திருக்குடும்ப கன்னியர்மடம் பாடசாலை மைதானம் (பெண்கள்)

* மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி எதிர் யாழ்ப்பாணம் திருக்குடும்பம் கன்னியர் மடம் பாடசாலை.

உடுவில் மகளிர் கல்லூரி மைதானம் (பெண்கள்)

* உடுவில் மகளிர் கல்லூரி எதிர் வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை. (203-86)

## சேவையில் ஈடுபடாது உள்ள பஸ்களுக்கான ஒரு தொகுதி உதிரிப்பாகங்கள் வந்து சேர்ந்தன

### அவை போதியனவாக இல்லை எனத் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 21

யாழ். கோண்டாவில் சாலையில் உதிரிப்பாகங்கள் இன்றிச் சேவையில் ஈடுபடாமல் உள்ள பஸ்வண்டிகளுக்கு உதிரிப்பாகங்கள் கொழும்பில் இருந்து எடுத்துவரப்பட்டுள்ளதாகவும் அவை போதுமானதாக இல்லை என்றும் கோண்டாவில் சாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

நேற்று முன்தினம் இந்த உதிரிப்பாகங்கள் கொழும்பிலிருந்து யாழ். எடுத்துவரப்பட்டுள்ளன. புதிய, மீள் சீரமைக்கப்பட்ட ரயர் உட்பட 201 ரயர்கள், 24 ஒயில் பரல்கள், 20 பற்றிகள், ரியூப்புகள் மற்றும் உதிரிப்பாகங்களும் கொழும்பிலிருந்து எடுத்துவரப்பட்டன.

உதிரிப்பாகங்கள் போதியளவு இன்மையால் யாழ். மாவட்டத்தில் உள்ள டிப்போக்களில் நூற்றுக்கணக்கான பஸ் வண்டிகள் சேவையில் ஈடுபடாமல் உள்ளன. அவற்றில் முழுவதையும் சேவையில் ஈடுபடுத்துவதற்கு கொழும்பிலிருந்து எடுத்துவரப்பட்டுள்ள உதிரிப்பாகங்கள் போதுமானதாக இல்லை எனவும் சேவையில் ஈடுபடாமல் உள்ள பஸ் வண்டிகளில் குறிப்பிட்டளவு தான் சேவையில் ஈடுபடுத்தக்கூடியதாக உள்ளதாகவும் கோண்டாவில் சாலை வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (203-9)

## நாட்டுக்கூத்துப்போட்டி

யாழ்ப்பாணம்,மே 21

தீவக வலயப் பாடசாலைகளுக்கிடையிலான நாட்டுக் கூத்துப்போட்டி எதிர்வரும் 28 ஆம் திகதி காலை 9 மணிக்கு வேலணை மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

நாட்டுக்கூத்துப் போட்டியில் பங்குபற்றும் பாடசாலைகள் விண்ணப்பங்களை நாளை வெள்ளிக்கிழமைக்கு முன்னர் பிரதிக்கல்விப் பணிப்பாளர், மாணவர் அபிவிருத்திப் பிரிவு என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (201)

## குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

## ஹொக்கிப் போட்டிக்கான அணி நிரல் ஒழுங்கு

வலி.வடக்கு, மே21

யாழ்.மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையேயான ஆண்கள், பெண்களுக்கான ஹொக்கிப் போட்டிக்கான அணி நிரல் ஒழுங்குகள் நாளை வெள்ளிக்கிழமை மு.ப.10 மணிக்கு வலிகாமம் கல்வி வலய அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

போட்டியில் கலந்து கொள்ளவுள்ள பாடசாலைகளின் பொறுப்பாசிரியர்களை சமுகமளிக்கும்படி யாழ்.மாவட்டப் பாடசாலைகள் விளையாட்டுக் குழுத் தலைவரும் வலிகாமம் கல்வி வலயக் கல்விப் பணிப்பாளருமான ப.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார். (203- 86)

# உலக வங்கியின் நிதியுதவியுடன் யாழ். மாவட்டத்தில் 5493 வீடுகள்

யாழ்ப்பணம், மே 21

உலக வங்கி நிதியுதவியுடனான வடக்கு, கிழக்கு மீள் நிர்மாணத் திட்டத்தில் யாழ். மாவட்டத்தில் இதுவரை 5 ஆயிரத்து 493 வீடுகள் அமைக்கப்பட்டு பணிகள் நிறைவு பெற்றுள்ளன.

திட்டத்தின் யாழ். மாவட்டப்பணிப்பாளர் எஸ்.சாம்பசிவம் இத்தகவலைத் தெரிவித்தார்

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது [illegible] னான வட[illegible]டத்தில் வீடமைக்கும் பணிகள் கடந்த 2004 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.

அத்திட்டத்தில் யாழ். மாவட்டத்தில் 8 ஆயிரத்து 353 வீடுகள் அமைப்பதற்கு அனுமதி கிடைக்கப்பெற்றன.

அவற்றில் இற்றைவரை 5 ஆயிரத்து 493 வீடுகள் அமைக்கப்பட்டு பணிகள் நிறைவுபெற்று பயனாளிகளிடம் வீடுகள் கையளிக்கப்பட்டுள்ளன.


மிகுதி 2 ஆயிரத்து 860 வீடுகள் அமைக்கும் பணிகள் துரிதமாக நடை[illegible]ன்றன.

[illegible] பணிகள் இந்த ஆண்டு ஜூன் மாதத்துக்குள் நிறைவுபெறும். அதற்கான துரித நடவடிக்கைகள் நடைபெற்றுவருகின்றன.

பணிகள் நிறைவுபெற்றுள்ள வீடுகளின் எண்ணிக்கை பிரதேச செயலக ரீதியாக வருமாறு;

சங்கானை-618, நெடுந்தீவு-52, யாழ்ப்பாணம்-281, காரைநகர்-184, கரவெட்டி-194, ஊர்காவற்றுறை-125, கோப்பாய்-976, நல்லூர்-375, பருத்தித்துறை-116, சண்டிலிப்பாய்-512, தெல்லிப்பழை-512, தென்மராட்சி -935, உடுவில்- 433, வேலணை- 155, மருதங்கேணி-25. (203-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தென்கோவை விளையாட்டரங்க வி
# ஸ்ரீ வீரமாகாளி அ
# சித்திரத் தேர் வெள்ளோட்

## ஆதீன முதல்வரின் அருளாசிச் செய்தி



கோப்பாய் தெற்கு அழகியவான் திருநகரில் எழுந் தருளி அருளாட்சி புரியும் அருள்மிகு ஸ்ரீ வீரமாகாளி அம்பாளுக்குப் புதிய சித்திரத்தேர் அமைந்திருப்பதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றோம். இன்று இவ்வாலயத்தில் நடைபெறும் புதிய சித்திரத்தேரின் 'வெள்ளோட்டம் ஊருக்கும், மக்களுக்கும், ஆலயத்திற்கும் பல சிறப்புகளைச் சேர்த் திருக்கின்றது.

திருப்பணிச் சபையினரின் பூரணமான கைங்கரியத் தினாலே 21' உயரத்தில் அழகிய சிற்ப விதிமுறைகளுக்கு அமைய உருவாக் கப்பட்டுள்ளது. இப்பணி சிறக்க ஒத் துழைத்த அனைவருக் கும் அம்பிகையின் அருள் கிடைக்கப் பிரார்த்தித்து அரு ளாசி கூறுகின்றேன்.

*''என்றும் வேண்டும் இன்ப அன்பு''*

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்சுவாமிகள், *நல்லை ஆதீனம்.*

## தேர்காணும் அவா நிறைவேறுகின்றது



பல்வேறு சிறப்புக்களையும் தன்னகத்தே கொண்ட கோப் பாய் நகரிலே, கோயில் கொண்டெழுந்தருளி, வேண்டும் வரமீந்து, அருள்பாலித்துவரும் அன்னை அருள்மிகு ஸ்ரீவீரமா காளி அம்பாளுக்குப் புதிய சித்திரத்தேரொன்று அமைத்து, அதன் மீதவள் பவனிவரும் அற்புதக் காட்சி காண வேண்டு மெனும் அவளடியார்களின் வேணவா, இன்று புதிய சித்திரத் தேரின் வெள்ளோட்டத்துடன் கைகூடுகின்றது. கோப்பாய் ஸ்ரீ வீரமாகாளி அம்பாள் தேவஸ்தானத்தின் அருள்மிகு வரலாற்றில் இத் தேரோட்டம் மிக முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வாகும். இந் துக்களின் மஹோற்சவங்களில் தேர்த் திருவிழா மகத்தான தாகும். இத்தகைய சிறப்பு வாய்ந்த தொரு நாளில் அருள்மிகு ஸ்ரீ வீரமாகாளி அம்பாள் புதிய சித்திரத் தேரில் எழுந் தருளி, வீதியுலா வந்து, அடியாருக்கு அருள்பாலிக்கக் காத்திருக்கும் மகத் தான நாளின் தெய்வீக நிகழ்வுகள் அனைத்தும் சிறந்து நிற்க, அன்னை அவளருள் வேண்டி வாழ்த்துகின்றேன்.

*க.கணேஷ், அரசாங்க அதிபர், மாவட்டச் செயலகம், யாழ்.மாவட்டம்.*

## வெள்ளோட்டம் காணும் தென் கோவை வீரமாகாளி அம்மன் சிற்பத்தேர்

தென்கோவை பதியிலுறை ஸ்ரீ வீரமாகாளி அம்பாள் பவனிவர உருவாக்கப்பட்ட சிற்பத்தேர் இன்று வெள்ளோட்டம் காண்பது யாழ்.இந்து மக்களின் பேறே எனலாம்.

இத் திருத்தேரை உருவாக்கிய கலைஞர் திருநெல்வேலியில் 03.06.1956 ஆம் ஆண்டில் பிறந்த விஸ்வப் பிரம்மஸ்ரீ நடராசா சற்குருநாதன் ஆச்சாரியார். யாழ்.செங்குந்தா இந்துக் கல்லூரியில் தரம் 6 வகுப்புடன் தமது பாடசாலைக் கல்விக்கு முற்றுப்புள்ளி வைத்தார். ஆறுமுகம் சிற்பாலயத்தில் கலைஞர்களுக்கு ருசியாக உணவு தயாரித்தலுடன் தொழில் உதவியாளராகவும் தனது பன்னிரண்டாம் வயதில் பணி தொடங்கினார்.

இலங்கையில் பல பாகங்களிலும் உள்ள ஆலயங்களில் தேர் நிர்மாணங்களில் பணியாற்றி வந்தார். இலங்கையின் தலை சிறந்த ஸ்தபதியாக விளங்கிய கலாகேசரி தம்பித்துரையின் புகழ் வாய்ந்த மாத்தளை முத்துமாரியம்மன் தேர் நிர்மாணச் சிற்பக் கலைப்பணிகளிலும் பணியாற்றி வந்தார் சற்குருநாதன்.

சிற்ப சக்கரவர்த்தி ஆ.ஜீவரத்தினம் ஆச்சாரியார் அன்னாரின் தமையனார். கலாகேசரி ஆ.தம்பித்துரை ஆச்சாரியார் ஆகிய இருவருக்கும் மைத்துனரான சற்குருநாதன், அவர்களின் கீழ் பயின்று சிற்பக்கலையில் பெரிதும் பிரகாசிக்க விரும்பி, இந் தியத் தமிழகம் கண்ட மாபெரும் சிற்பியும் தேர் ஸ்தபதிகளின் ஒருவருமாகிய மாயவரம் ச.ஏகாம்பரம் ஆச்சாரியாரின் பொன்னாலை வரதராஜப் பெருமான் தேர் நிர்மாணத்தில் சிறிது காலம் சிற்பப் பயிற்சி பெறலானார்.

இத்தகு சிற்பக்கலை பயிற்சிகளைப் பெற்ற சற்குருநாதன் எழில்மிகு வீரமாகாளி அம்பாளுக்கும் 21' 30'' உயர முடைய திராவிட எண் கோண முகபத்திர வடிவமைப்பில் இத்தேரைச் சிறப்பாக உருவாக்கியிருக்கின்றார். நான்கு சக்கரங்களுடன் தேர் இலக்கண வகையில் அமைந்துள்ளது. இத் தேர் நிர்மாணப் பொறுப்பு தேர்த் திருப்பணிச் சபை மூலம் ஆலய நிர்வாக உரிமை வட்டத்தினர் செய்வித்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இத் திருத்தேரானது உருவாக்க முறையிலும் சிற்பத் திறன் மிளிரும் வகையிலும் யாழ்ப்பாணத்து இந்துக்கலையு லகில் ஓர் கவனம் பெறும் தேர்களில் ஒன்றாகத் திகழ்கின் றமை தெளிவாகின்றது என்பதில் ஐயமேதுமில்லை.

வேலுப்பிள்ளை அம்பிகைபாகன், B.A.(Hons)M.Ph.
முன்னாள் துணை விரிவுரையாளர், யாழ்.பல்கலைக்கழகம், செயற்றிட்ட அலுவலர் முறைசாராக்கல்வி, வடமராட்சி அலுவலகம்.



## திருத்தேர் அமைய திடமுடன் உ

தென்கோவைப் பதியில் உறைந்தரு
மிகக்குறுகிய காலத்தில் பெருகி... தன
உறுதிமிக்க தோற்றத்தில் இன்று அம்பா
கவரும் வண்ணம் தோற்றம் பெற்று
திறத்தாலே இத் திருப்பணிக்குக் கி
''அவனின்றி ஓர் அணுவும் அசைய
அருட்கருணைதான் எம்மை யெல்லாம்
கொண்டது.

எமக்கெல்லாம் பக்கபலமாக நின்று
அத்தனை அன்பு நெஞ்சங்களையும் இவ்
அவர்களுக்கும் எமது நன்றியினைக் கா
அம்பாளின் திருவருளை வேண்டிப் பிர

**ஜிலாந்தன்**
கட்டட ஒப்பந்தகாரர்
அன் ரான்ஸ் போட் சேவிஸ்
இல.17, 5 ஆம் ஒழுங்கை
பிறவுண் றோட்,
யாழ்ப்பாணம்.
உரிமையாளர்: நா.யோகராசா
(சாந்தன்)

புதிய இரதம் ஏறிப் பவனி வரும்
புனிதத் தாயைப் போற்றுகின்றோம்
முன்பள்ளி முதல் A/L வரை உயர்ந்து
நிற்கும் உயர் நிறுவனம்
**மதுரம் இன்ஸ்ரிரியூட்**
கோப்பாய்
தலைமை அலுவலகம்:
டச்சு வீதி, இருபாலை, கோப்பாய்
உயர் கல்விப் பிரிவு
பருத்தித்துறை வீதி, கட்டப்பிராய்.

**கிருபா கிறெசர்**
உரிமையாளர்
மு.கதிரமலை (செல்லக்கிளி)
வல்லைச் சந்தி,
அச்சுவேலி.

**ஈஸ்வரன்**
கல்லுடைக்கும்
ஆலை
புத்தூர் கிழக்கு,
புத்தூர்.

**மாதுங்கன்**
கட்டட
ஒப்பந்தகாரர்
38/4, ஐயர் பாடசாலை
ஒழுங்கை,
கோண்டாவில் மேற்கு,

**நிலா**
ரவல்ஸ் அன்
பாடசாலை சேவை
மூன்றாம் கட்டை,
யாழ்ப்பாணம்.

**அயேகி**
ரவல்ஸ்
அழகியவான் தோட்டம்,
கோப்பாய்.

கி

**வள்ளுவர்**
அக்கடமி
பலாலி வீதி,
உரும்பிராய்.

**அபிராமி**
அரிவு காலையும் மர வியாபாரமும்
உரிமையாளர்:
திருமதி வசந்தி அருந்தவராசா
டச்சு வீதி,
கோப்பாய் தெற்கு,

**தயா நகைப்பூங்கா**
தங்க நகை வியாபாரம்
அழகிய கலைநயம், எழிலுறு தொழில்
வளம், உயர் தரமிகு தங்க நகைகளுக்கு
22 கரட் தங்க நகைகள்
குறித்த தவணையில்
உத்தரவாதத்துடன்
செய்து கொடுக்கப்படும்.
வீதி, யாழ்ப்பாணம்.

**SUGANTHAN CIVIL WORKS,**
*CONTRACTORS OF HIGHWAYS, BUILDING*
and materials suppliers.
23, நாவலடி ஒழுங்கை,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
உரிமையாளர்:-
தெய்வேந்திரம்-
நகுலேஸ்வரன்


**AS**
CIVIL EN
WO
CONTRA
HIGHWAYS,
and IRRIGAT
உடுவில்,
உரிமை
அம்பாத்துரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ங்க வீதி அழகியவான் திருவருள்மிகு அம்பாள் ஆலயம் ோட்ட விழாச் சிறப்புமலர்



இன்று (21.05.2009) வியாழக்கிழமை காலை 9.00 மணி



## ஆலயக் குருவின் ஆசிச் செய்தி



சகல செல்வங்களும் பொலிந்து விளங்கும் கோப்பாய் தெற்கு விளையாட்டரங்க வீதியில் எழுந்தருளி அருள் பாலிக்கும் ஸ்ரீ வீரமாகாளி அம்பாளுக்கு கடந்த இருபத்திரெண்டு வருடங்களுக்கு மேலாக நித்திய நைமித்திய பூசைகளை, உற்சவங்களை நிறைவேற்றி வருவதற்கு அம்பாளின் திருவருள் இவ்வூர் மக்களின் நற்பணியுமே காரணமாகும்.

அம்பிகையின் அற்புதச் செயல்கள் அளவிட முடியாதென "பங்குனி மூன்றாம் திங்களில் பக்தர்களை தீ மேல் நடந்தும், அம்பிகையின் அருள் வகை சொல்லுக்குள் அடங்காது. அம்பாளுக்கு அழகிய சித்திரத் தேரொன்றை அடியவர்கள் அமைத்துக் கொடுத்துள்ளார்கள். இத் தேர் சிற்பாசாரி "கலைஞானச் சுடர்" சற்குருநாதன் குழுவினரின் கைவண்ணத்தில் உருவாகி யிருக்கின்றது. எல்லாம் வல்ல அம்பாளின் திருவருளே இதற் கெல்லாம் காரணம், எல்லோருக்கும் காளியம்பாளை வேண்டி எனது நல்லாசிகளைக் கூறிவாழ்த்துகின்றேன்.

*வேதாகம வித்துவ சிரோன்மணி, கிரிஜாலங்கார மணி,*
சிவஸ்ரீ ரவீந்திர ராஜக்குருக்கள்.

## திருத்தேர் வெள்ளோட்டம் சிறப்பாக நிகழட்டும்



பண்பாட்டுச் சிறப்பினாலும் பக்தி மேம்பாட்டினாலும் உயர்வடைந்திருக்கின்ற தென்கோவை நகரில் விளையாட்டரங்க வீதி, அழகியவான் எனும் கிராமத்தில் அருள் பாலிக்கும் அருள்மிகு ஸ்ரீ வீரமாகாளி அம்பாளுக்கு ஒரு புதிய சித்திரத் தேர் அமைக்கப்பட்டு, இன்று வெள்ளோட்டம் விடப்படுகின்ற செய்தி மன மகிழ்ச்சியைத் தருகின்றது. திர்ஷிகா சிற்பக் கலைக் கூடத்தினரின் கைவண்ணத்தினாலும், ஊர்மக்களின் திருப்பணிக் கைங்கரியத்தினாலும், திருப்பணிச் சபையாரின் அளப்பரிய செயற்பாட்டினாலும் இத் திருத்தேர் முழுவடிவம் பெற்றிருக்கின்றது.

இத்தகைய சிறப்பு வாய்ந்த இத் திருத்தேர் 21' உயரம் கொண்டு வண்ணமலை போல காட்சியளிக்கின்றது. இத் தேரில் அம்பாள் வலம்வரும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும். இந்தச் சிறந்த நற்பணியை நிறைவேற்றிய அனைவருக்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்து திருத்தேர் வெள்ளோட்டம் சிறக்க அம்பிகையைப் பிரார்த்திக்கின்றேன்.

C.A.மோகன்றாஸ்,
*பிரதேச செயலர், வலி.கிழக்கு, கோப்பாய்.*

## தாய்த்தெய்வத்திற்கு தேர் வெள்ளோட்டம்



தென்கோவைத் திருநகரில் அருள் பாலிக்கும் அன்னை ஸ்ரீ வீரமாகாளி அம்பாளுக்கு இந்த விரோதி வருடத்திலே ஓர் அழகிய சித்திரத் தேர் எண்கோண முகபத்திர அமைப்பில் உருவமைக்கப்பட்டு, இன்று வெள்ளோட்டம் விடப்படுகிறது. ஆலய தேர்த் திருப்பணிச் சபையினரின் அளப்பரிய திருப்பணியால் இத் திருத்தேரானது உருவாகியிருக்கிறது. இத்தேர் வடிவினை நோக்கும் பொழுது இந்த உடம்பு ஒப்பற்றதொரு தேர் உயிரானது உடம்பை இயக்கிக்கொண்டிருக்கிறது. உடல் வெறுஞ்சடம். உடலாகிய தேர் தன்னை இயக்கிக்கொண்டிருப்பது உயிர் என்பதை அறியவில்லை.

இந்தப் பூமியும் இறைவனுக்கு ஒரு தேரே. பூமியாகிய தேரில் இறைவன் எழுந்தருள் புரியும் உண்மையை உணர்பவர்களுக்கு இவ்வுலகில் யாதுமோர் குறைவில்லை.

பண்பாட்டுச் சிறப்பினாலும் பக்தி மேம்பாட்டினாலும் உயர்வடைந்து வரும் கிராமமாகத் தென்கோவை நகரின் திரு ஊர் போன்றமைந்திருப்பது "அழகிய வான்" என்னும் கிராமம். இக் கிராமத்தில் பிறந்த சைவசீலர் கந்தன் நாகநாதி என்பவரே ஸ்ரீ வீரமாகாளி அம்பாளின் ஆலயத்தை ஆரம்பத்திலே அமைத்திருந்தார். இத்தகைய பதியில் வீற்றிருந்து அருள்பாலிக்கும் அன்னையாக விளங்குபவள் ஸ்ரீ வீரமாகாளியம்பாள்! தாய்த் தெய்வ வழிபாடே எமது சமயத்தின் மூலவழிபாடாகும். அன்னையின் அருளாட்சியால்தான் இவ்வுலகமே இயங்குகிறது.

சகல ஆற்றல்களுக்கும் இருப்பிடமானவள் இவளே. அம்பாளை உபாசித்து பெரும்புண்ணியம் பெற்றோர் பலர். அந்த வகையில் அன்னை வீரமாகாளியம்பாளுக்கு ஆலயத்தில் வலம் வருவதற்காக அமைக்கப்பட்ட புதிய சித்திரத் தேர் இன்று வெள்ளோட்டம் கண்டு மகிழ்கிறது.

இப்பணியில் உழைத்த அனைவருக்கும் வாழ்த்துக்களைத் தெரிவித்து எம்பிராட்டியின் திருவருளைப் பிரார்த்தித்து அமைகிறேன்.

மதுரகவி. காரை.எம்.பி. அருளானந்தன் J.P,
*ஆசிரியர், ஸ்ரான்லிக் கல்லூரி.*

## ஆலய அறங்காவலரின் பிரார்த்தனை



தென்கோவைத் திருநகரில் அழகிய வான் எனும் திருப்பதியில் எழுந்தருளி அருள் பாலிப்பவள் அன்னை ஸ்ரீ வீரமாகாளியம்பாள். எனது முன்னோரால் பரிபாலிக்கப்பட்டு வந்த ஆலயம் எமது காலத்திலும் சில திருப்பணிகளைக் கண்டுவருகின்றது. அம்பாளுக்கு இந்த விரோதி வருடத்திலே ஒரு சித்திரத் தேர் உருவமைக்கப்பட்டுள்ளது.

ஆலய திருப்பணிச் சபையினால் அளப்பரிய கைங்கரியத்தினால் இத்தேர் உருவாகியிருக்கின்றது. சித்திரத்தேரின் வெள்ளோட்ட விழா இன்று நடைபெறுகின்றது. நாளை 22.05.2009 அம்பாள் திருத் தேரிலே வலம் வர இருக்கிறாள். இத் திருத்தேர் உருவாக சகல வழிகளிலும் உதவிய அனைவருக்கும் அம்பாளின் திருவருள் பெருகப் பிரார்த்திக்கின்றேன்.

*சி.சோமசுந்தரம். ஆலய அறங்காவலர்.*

## ன் உழைத்த திருப்பணிச்சபை

ல் உறைந்தருளும் ஸ்ரீவீரமாகாளி அம்பாளுக்கு ருகிய தனத்தில் அழகிய திருக்கோலத்தில் ன்று அம்பாளுக்குச் சித்திரத்தேரானது சிந்தை ம் பெற்றுள்ளது. அம்பாளின் கருணைத் ணிக்குக் கிடைத்த பெருஞ்சித்தியாகும். ம் அசையாது" எல்லாம் அம்பிகையின் யெல்லாம் இத் திருப்பணியில் இணைத்துக்

மாக நின்று இத் திருப்பணி சிறக்க உதவிய ளையும் இவ் வெள்ளோட்ட நாளில் நினைத்து யினைக் காணிக்கையாக்கி அவர்களுக்காவும் வண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

- தேர்த் திருப்பணிக்குழு -


**சிறீராம்**
கிறைண்டிங் மில்
ஜி.பி.எஸ்.றோட்,
கல்வியங்காடு,
யாழ்ப்பாணம்.

**அன்னைம்ஸ்**
றான்ஸ்போட்
விளையாட்டரங்க வீதி,
கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

**பிரியா**
மர அரிவு ஆலை
மாதா கோயிலடி,
நீர்வேலி வடக்கு.
உரிமையாளர்:
செ.செல்வநாதன்

**திருவருள் நகைமாடம்**
அசல் 22 கரட் நகைகளை
விரும்பிய டிசைன்களிலும் குறித்த
தவணையிலும்
செய்து பெற்றுக்கொள்ளலாம்.
தொ.பே: 0776181416
பலாலி வீதி, திருநெல்வேலிச் சந்தி,
திருநெல்வேலி.

**ASHA**
CIVIL ENGINEERING
WORKS
CONTRACTORS OF
GHWAYS, BUILDINGS
IRRIGATION WORKS
டுவில், சுன்னாகம்
உரிமையாளர்:-
யாத்துரை இராமச்சந்திரன்

**GISO CONSTRUCTON**
Regd; R.m.c. RDA RDD
உரிமையாளர்:-
பி.எஸ்.சிவசுகிர்தன்
"மலர் வசந்தன்"
கே.கே.எஸ். வீதி,
இணுவில்,
சுன்னாகம்.

**NIGARAA**
CONSTRUCTION
and METAL
SUPPLIERS
இல. 17, 5ஆம் லேன்,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
உரிமையாளர்:
என். தனேந்திரன்
தொ.இலக்கம்:- 021 222 3839,
0776254986

**MARUTHY TRACTOR ENGINEERS**
DEALERS IN TRACTOR
SPARES
SPECIALISED
ENGINEERS IN
ALL KIND OF TRACTORS
இல:-195, பருத்தித்துறை
வீதி,
யாழ்ப்பாணம்
T.P - 0777448341

**கிஷோலன்**
அழகு மாடம்
நல்லூர் வீதி,
முடமாவடி.
உரிமையாளர்:-
சி. ஜெயகுலசிங்கம்.
T.P - 0779790896


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்



### வடிவேலு செல்லம்மா (நல்லு)

அளவெட்டி மத்தி, அளவெட்டியைச் சேர்ந்த வடிவேலு செல்லம்மா (நல்லு) 17.05.2009 ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபை தம்பதியினரின் மூத்த மகளும், காலஞ் சென்ற வடிவேலுவின் அன்பு மனைவியும், காலஞ் சென்ற சிவசுப்பிரமணியம் மற்றும் பரமேஸ்வரி, விஜயலட்சுமி (இந்தியா), சொர்ணலிங்கம் (லிபியா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஞானபூரணி, சுப்பிரமணியம், காலஞ்சென்ற சிவபாத சுந்தரம் மற்றும் ராஜேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (21.05.2009) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நண்பகல் 12 மணியளவில் தகனக் கிரியைக்காக மல்லாகம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அளவெட்டி மத்தி,
அளவெட்டி.

தகவல்:
குடும்பத்தினர்.

## இலக்கியப் பயிற்சிப் பட்டறை

யாழ்ப்பாணம், மே 21

பாடசாலை மாணவர்களின் கலை இலக்கிய ஆர்வத்தையும், ஆக்கத் திறனையும் விருத்தி செய்வதன் நோக்கில் யாழ். மாவட்ட செயலகம் நடத்தும் தமிழ் இலக்கியப் பயிற்சிப்பட்டறை இன்று வியாழக் கிழமை காலை 9 மணிக்கு இடம் பெறவுள்ளதாக யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஆ.சிவசுவாமி அறிவித்துள்ளார்.

மேற்படி பயிற்சிப் பட்டறை யாழ். செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

பிரதேச செயலக மற்றும் உதவி அரசாங்க அதிபர் பிரிவு ரீதியாகத் தெரிவு செய்யப்பட்ட எழுபத்தைந்து மாணவர்கள் இந்தப் பயிற்சிப் பட்டறையில் பங்கு பற்றவுள்ளனர் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்த இலக்கியப் பயிற்சிப்பட்டறையில் கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ், யாழ் பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா, யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறை சிரேஷ்ட விரிவுரையாளர்களான ஈ.குமரன், செல்வ அம்பிகை நடராஜா ஆகியோர் கருத்துரை வழங்கவுள்ளனர்.(201)

## ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம்
11.04.1927

மறைவு
31.05.2008

அமரர்

### திருமதி நீலாயதாட்ஷி சிவராஜலிங்கம்

திதி : துவாதசி (21.05.2009)



தீராத வேதனையால் தினம் தினம்
துடிக்கின்றோம் மாறாத சோகத்தில்
ஓராண்டு கழிந்ததுவே ஆண்டொன்று
சென்ற போதும் ஆறவில்லை
உன் நினைவு, அன்பான குணமுடனும்
அழகான சிரிப்புடனும்
கனிவான வார்த்தைகள் பேசி
பரிவுடனே எமை வளர்த்துப்
பாசமாய் அரவணைத்த - அம்மாவே
வேராக நீயிருந்த எம் குடும்பம் என்றும்
மறந்திடுமோ உன் நினைவை.

இல.86/2, சேர்.பொன்.இராமநாதன் வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

## நினைவஞ்சலி

முதலாம் ஆண்டு



பிறப்பு 26 ★ 06 ★ 1938 — இறப்பு 21 ★ 06 ★ 2008

### குருசுமுத்து இம்மானுவல் இராசநாயகம்

(முன்னாள் ஊழியர், மாநகரசபை)

இரண்டாம் ஆண்டு



பிறப்பு 31 ★ 01 ★ 1946 — இறப்பு 17 ★ 05 ★ 2007

### சாந்தநாயகி இம்மானுவல் இராசநாயகம்

முடிந்துவிட்டன ஆண்டுகள்
புன்சிரிப்புடனே தவழும் உங்கள்
முகம் காணா விடியல்கள்
யுகம் பல கடந்தாலும் உங்கள் நினைவு
முடியாமல் என்னோடு தொடரும்...

இ.நிரோசன்
(மகன்)


81st John's way,
Modera,
Colombo-15

## சுந்தர்சன்

மானிப்பாய்

SUNDHARSON

### அதிரடி மலிவு விற்பனை




23.05.2009ஆம் திகதி சனிக்கிழமை
தொடக்கம் மாபெரும்
மலிவு விற்பனை ஆரம்பம்

- ★ மின் விசிறிகள் (Ceiling Fans, Table fans, Stand fdans)
- ★ மின் அலங்கார விளக்குகள்,சுவர் விளக்குகள்,மேசை விளக்குகள,கூரை விளக்குகள் (Chandiliyars, Wall Brackets, Table Lamps, Hood fittings)
- ★ றைஸ் குக்கர்கள் (Rice cookers) ,அரைக்கும் இயந்திரங்கள், (Blenders),மின்அழுத்திகள் (Iron boxes), சாஜர் லைற்றுகள், (Charger Lights).
- ★ பல தரப்பட்டசுவிச்,பிளக் வகைகள் (Switches, Plug & Switches)
- ★ றோல் பிளக் வகைகள் (Extension cords),நீர் சுத்திகரிப்புத் தாங்கிகள் ( Water Filters) மின் அடுப்பு (Hot Plates) சுடுநீர்/குளிர்நீர் மாற்றிகள் (Water Despensers), மின் கேத்தல்கள், ( Electric Kettles.)
- ★ DVD Players,VCD Players,Boofer Sets.
- ★ கலர் ரியூப்பல்ப்,கலர் "U" பல்ப்வகைகள் (Colour T/Bulbs, Colour Energy Saving bulbs)

விசேட குறிப்பு :- ஞாயிறு தினத்திலும் குறித்த மலிவு விற்பனை தொடரும் என்பதை வாடிக்கையாளருக்கு அறியத்தருகின்றோம்! சிறந்த தெரிவுகளுக்கு முந்துங்கள்! உங்கள் தேவையே எங்கள் சேவை!

கட்டட ஒப்பந்தக்காரர்கள்,வியாபாரிகள்,மின் இணைப்பாளர்கள்,வாடிக்கையாளர்களுக்குத் தேவையான உபகரணங்களை மிக மலிவுவிலையில் பெற்றுக்கொள்ள ஒரே அரிய சந்தர்ப்பம்!தவறவிடாதீர்கள்!

## SEWALANKA FOUNDATION

### CALLING OF TENDER FOR MATERIALS SUPPLY AND LABOUR

SEWALANKA FOUNDATION is a National Non-Governmental Organization which has been in existence for the last fifteen years serving the needy and the deserving, severely affected either by natural disasters or by ethnic conflict across the entire country, and generously funded by the
1) Radio Television Luxemburg (RTL) through welthungerhilfe for building
2) Stadt Kiel (City of Kiel / Germany) - Furniture

The tender document can be collected from 22nd of May 2009 from the following offices.

1. Sewalanka Foundation District Office, No.250, Temple Road, Nallur, Jaffna.
2. Sewa Lanka Foundation, Construction Unit, No.212/1, Temple Road, Nallur, Jaffna

**Sealed Tenders are invited for the following materials supplies and construction works up to 12th of June 2009 at 2.30 p.m.** and will be **open on 13th of June 2009 at 9.00am** at District Office, Jaffna. The bidders or their authorized representatives are invited to be present at the occasion.

The validity should be offered for 45 days from the time of opening of bids and 90 days from the binding of contract agreement.

The quantities of items envisaged in the projects advising to quote separately to the kind of merchandize of materials as per the specification of material as shown in the contract document.

| Tender Code | Description | *Non-refundable Deposit Rs.* |
|---|---|---|
| SLF/DWHH/SC/1073-09/01 | Ordinary Portland Cement SLS 107 | 250.00Rs for each tender document |
| SLF/DWHH/SC/1073-09/02 | Clay Roof Tiles Flat & Ridge | |
| SLF/DWHH/SC/1073-09/03 | Hardware Item | |
| SLF/DWHH/SC/1073-09/04 | Electrical Items | |
| SLF/DWHH/SC/1073-09/05 | Paint | |
| SLF/DWHH/SC/1073-09/06 | Local Building Materials | |
| SLF/DWHH/SC/1073-09/07 | Roof Timber | |
| SLF/DWHH/SC/1073-09/08 | Timber | |
| SLF/DWHH/SC/1073-09/09 | Fabrication | |
| SLF/DWHH/SC/1073-09/010 | Labour | |

Prepared Tenders adhering to all the conditions specified in the Tender Documents should be put into the tender box at District Office, Jaffna or sent by registered post addressed to: **The Chairman, Procurement Committee, Sewalanka Foundation, District Office, No. 250, Temple Road, Nallur, Jaffna to receive on or before 12th of June 2009 at 2.30 pm and Please Insert the tender code in the top of the envelop.**


If you need any clarification or have any comments, don't hesitate to contact on Tel No.. **021-2228549 or 021-2228754** E-Mail to **Jaffna@sewalanka.org** on or before **12th of June 2009 at 1.00PM**

Any expenses arising on the preparation of tender document and submitting should not be reimbursed.

Late tenders will not be accepted.


**Secretary, Procurement Committee, District Office,
SEWALANKA FOUNDATION,
No.250, Temple Road, Nallur, Jaffna.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

29.



1) 30 2) 35 3) 40
4) 45 5) 54

30. தரப்பட்ட தையல்களில் அலங்காரத்தையல் யாது?
1) விஸ்பம். 2) பெருநூலோடி. 3) சிறுநூலோடி.
4) துன்னாத்தையல். 5) சங்கிலித்தையல்.


31. பல்பக்க சமச்சீர் உரு யாது?



32. நிழற்றிய பகுதியின் பின்னம் யாது?
.................................



33. நீரில் காணப்படும் மூலகங்கள் எவை?
.................................................................


34. இத்தாவரம் எப்படிப்பட்ட இடத்தில் வளரும்?
.................................................................


35. பின்வரும் கூற்றுக்களுக்கிடையே தனிப்பட்ட அபிப்பிராயத்தை காட்டுவது யாது?
1) சம்பலும் சோறும் சுவைமிக்க உணவாகும்.
2) நெய்த்தோலியை சாப்பிடும்போது கல்சியம் கிடைக்கும்.
3) சோறு மாப்பொருள்மிக்க உணவாகும்.
4) தோடம்பழத்தில் விற்றமின் C உண்டு.
5) மீன் புரதமிக்க உணவாகும்.

36. பின்வரும் தகவல்களை வாசித்துத் திருத்தமான விடையை இனங்காண்க.
1) பூனை, ஆடு அளவு பெரியதெனின், நீள்வளையத்திற்கு முன்பாக உள்ள இலக்கம் 1ஐச் சுற்றி வட்டம் வரைக.
2) ஆடு, பூனையிலும் சிறியதெனின், முக்கோணிக்கு முன்பாக உள்ள இலக்கம் 2ஐச் சுற்றி வட்டம் வரைக.
3) பூனை, ஆட்டிலும் பெரியதெனின், செவ்வகத்திற்கு முன்பாக உள்ள 3ஐச் சுற்றி வட்டம் வரைக.
4) பூனை, ஆடு ஆகிய இரண்டும் நாலுகால் விலங்குகளெனின், சதுரத்திற்கு முன்பாக உள்ள இலக்கம் 4ஐச் சுற்றி வட்டம் வரைக.
5) மேற்குறித்த எதனையும் பற்றித் தீர்மானிக்க முடியாவிடின், வட்டத்திற்கு முன்பாக உள்ள இலக்கம் 5ஐச் சுற்றி வட்டம் வரைக.



37. அலங்கார உரு யாது? .........................................


38. பரிசோதனை எதனைக் குறிக்கின்றது? .........................................



39. இது எத்தனையாம் வகை நெம்பு? .........................................


40. உரு - திரள், அறிஞர் - அவை, நரி - கூட்டம், மலை - .........................................

இவ்வினாத்தாளின் விடைக்குறிப்புக்களும் வினாத்தாள் 13 இன் பகுதி 1 உம் அடுத்தவாரம் வெளிவரும்......

## தயார்படுத்தல் பரீட்சை -12, பகுதி-11 இன் விடைக்குறிப்புகள்

01 - 1. பருகுகின்றன, குடிக்கின்றன, 2. மங்கல், இருள், 3. பனித்துளிகள், 4. அலறும், 5. பூ மலர்ந்து மணம் பரப்புகின்றது, 6. கேட்கிறோம், 7. இயற்கையின் கொடைகள், 08. - 1. அழகிய, ரீங்காரம் செய்யும், 2. விரும்பி 09. காற்றுள்ளபோதே தூற்றிக்கொள் 10. ஆழமறியாமல் காலை விடாதே, 11 - 1. வெளிச்சம், 2. அறிவிப்பு, 3. தொழில், 4. மண்ணரிப்பு 12. ? குறி, 13. குருதட்சணை, 14. உலகிலேயே மிக நீளமான சுரங்கப்பாதை ஜப்பானில் உள்ளது, 15. நான் வீட்டிற்குப்போய் வருகிறேன், 16. Hammer, 17.Rainbow, 18. தயவுசெய்து கதவை மூடவும், 19. Where are you going?, 20 - 1. அஸ்ச, 2. நாசய, 3. கட்ட 21. நல்ல நாளாகட்டும், 22. 4, 23. 1, 24. 3, 25. 4, 26. 1, 27. 3, 28. 2, 29. 1, 30. 3, 31. 4, 32. 3, 33. 3, 34. 3, 35. 3, 36. 3, 37. 2, 38. 4, 39. 2, 40. 2, 41. குதிரைத் தலையுடைய மனிதன், 42. தூபராம தூபி
43. கரப்பந்து (வொலிபோல்), 44. வலைப்பந்து, 45. (+,-) முனைகள் சரியாக இருப்பின் புள்ளி வழங்குக, 46 - 1. புதன், 2. 225, 3. 150, 47. 8m, 48. 17m, 49. 7 மணி 23 நிமிடம், 50.


51. 15 தடவைகள், 52. 4/8 / 1/2, 53. 0.8,
54 - 60 வரையான வினாக்கள் பொருத்தமான கருத்துள்ள வாக்கியங்கள்.

**எதிர்வரும் வியாழக்கிழமை கண்டி மாவட்ட பிரபல ஆசிரியர் திரு.S.சுரேஸ்குமார் தொகுத்துவழங்கும் வினாத்தாள்-13 இன் பகுதி 11 வெளிவரும் என்பதை மாணவர்களுக்கு கல்விச் சுடர் அறியத்தருகின்றது.**

**ஆக்கம்:-ஆசிரியர் திரு.S.சுரேஸ்குமார்**
**கம்பளை சாகீரா கல்லூரி**
தொடர்புகட்கு :- 077 3407175, 077 2519206

**கல்விச்சுடர் தொடர்பான**
**விமர்சனங்களுக்கும் கருத்துக்களுக்கும் பின்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்க.**
**021-2229944 / 071-6850005 / 071-4273035.**


கெருடாவில் இந்து தமிழ்க்கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி அண்மையில் இடம்பெற்றது. நிகழ்வில் முதன்மை விருந்தினராக கலந்துகொண்ட வடமராட்சி வலயக்கல்வி அலுவலக கல்வி நிர்வாகமும் கல்வி அபிவிருத்திக்கானபிரதிக்கல்விப் பணிப்பாளர் செ. உதயகுமார் மங்கள விளக்கேற்றுவதையும் அருகில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட மேற்படி பாடசாலையின் இளைப்பாறிய ஆசிரியர் சு.சிறிஸ்கந்தராசா மற்றும் பாடசாலை அதிபர் து.அருந்தவராசா ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம்.


மானிப்பாய் சோதிவேம்படி வித்தியாசாலையில் அண்மையில் இடம்பெற்ற வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட சண்டிலிப்பாய் கோட்டக்கல்விப் பணிப்பாளர் சி. கந்தசாமி,சிறப்பு விருந்தினர் ஓய்வு பெற்ற அதிபர் தி.அருட்பிரகாசபிள்ளை,மானிப்பாய் இந்துக்கல்லூரி அதிபர் எஸ்.சிவநேஸ்வரன் ஆகியோர் அழைத்து வரப்பட்டபோது எடுக்கப்பட்ட படம். (29)


முன்பள்ளி மாணவர்களுக்கான மாதாந்த கல்வி ஊக்குவிப்புப் போட்டியின் தொடக்கவிழா காரைநகர் சுப்பிரமணியம் வீதியில் அமைந்துள்ள காரை கிட்ஸ்பார்க் முன்பள்ளியில் அண்மையில் இடம்பெற்றது.
போட்டியில் வெற்றியீட்டிய முன்பள்ளி மாணவி செல்வி. கு.வைஸ்ணவி உரையாற்றுவதை முதலாவது படத்திலும், போட்டியில் பங்குபற்றிய முன்பள்ளி மாணவர் ஒருவருக்குக் காரைநகர் பிரதேச சபை பொதுசனத் தொடர்பு அதிகாரி சு.சிவஞானம் பரிசில் வழங்குவதை அடுத்துள்ள படத்திலும் காணலாம். (250)


குடமியன் அ.த.க. பாடசாலையில் கடமையாற்றி இடமாற்றலாகிச் சென்ற அதிபர் கா. குணசிங்கத்திற்கு பாடசாலை சமூகத்தினரால் அண்மையில் பிரிவுபசார விழா நடத்தப்பட்டது.
இந்நிகழ்வில் தென்மராட்சி வலயக்கல்விப்பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் உரையாற்றுவதையும் அருகில் அதிபர் க. உதயகுமாரன், விழா நாயகன் கா. குணசிங்கம், திருமதி குணசிங்கம் ஆகியோர் அமர்ந்திருப்பதைப் படத்தில் காணலாம். (207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ஆம் நாள் நினைவலைகளும் நன்றி நவிலலும்



## அமரர் குமாரவேலு சண்முகநாதன்

(ஓய்வுபெற்ற அதிபர் – கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்)

மலர்வு 20.06.1930

உதிர்வு 22.04.2009

கடந்த 22.04.2009 புதன்கிழமையன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் குமாரவேலு சண்முகநாதன் அவர்களின் இறுதிக்கிரியைகளில் கலந்து துயர் பகிர்ந்தோருக்கும், மலர்வளையம் வைத்து, அஞ்சலிப் பிரசுரம் வெளியிட்டு, பத்திரிகைகள் மூலம் கண்ணீர் அஞ்சலி தெரிவித்து மற்றும் தொலைபேசி மூலம் துயர்பகிர்ந்தோருக்கும் பல வழிகளில் நாடி வந்து உதவி புரிந்தோருக்கும் எமது நன்றிகளைத் தெரிவிப்பதோடு இன்று (21.05.2009) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நீர்வேலி தெற்கு,
நீர்வேலி.

குடும்பத்தினர்.

(சி/55844)


# இலங்கையின் மனிதாபிமான நெருக்கடிக்கு உடனடியாகத் தீர்வு காணப்பட வேண்டும்

## பிரிட்டன் வலியுறுத்து

கொழும்பு,மே21

''இலங்கைப் பிரச்சினைக்குத் தீர்வு காண வரலாற்றுச் சந்தர்ப்பம் ஒன்று தற்போது கிடைத்துள்ள அதேவேளை, மனிதாபிமான நெருக்கடிகளுக்கு இலங்கை உடனடித் தீர்வு காண வேண்டும்.''

- இவ்வாறு பிரிட்டனின் வெளிவிவகார அமைச்சர் மில்லி பான்ட் தெரிவித்துள்ளார்.'

இதுதொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு -

போர் நடைபெற்ற பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து வாழும் மக்களுக்கு உதவ மனிதாபிமான அமைப்புகளை இலங்கை அரசு அனுமதிக்க வேண்டும்.

அதேவேளை, இலங்கை அரசு தாராள மனப்பான்மையுடன் நடந்துகொள்ள வேண்டும்.

பொதுமக்கள் உயிரிழப்புகள் மற்றும் எதிர்கால நல்லிணக்கம் குறித்து பிரிட்டன் கவலையடைந்தது. விடுதலைப்புலிகளுக்கு பிரிட்டன் ஆதரவளிக்கின்றது என்பதை முற்றாக மறுக்கின்றேன்.

பெரும் எண்ணிக்கையான மக்கள் கொல்லப்பட்டனர். இடம்பெயர்ந்து வந்த பொதுமக்கள் பலர் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

ஐக்கிய நாடுகளின் மனிதாபிமானப் பணியாளர்கள் முகாம்களுக்குள் செல்லத் தடை விதிக்கப்படுள்ளது.

இலங்கைப் பிரச்சினைக்குத் தீர்வு காண வரலாற்றுச் சந்தர்ப்பம் ஒன்று தற்போது கிடைத்துள்ள அதேவேளை, மனிதாபிமான நெருக்கடிகளுக்கு இலங்கை உடனடித் தீர்வு காண வேண்டும்.

அதேவேளை இன்னும் பொதுமக்கள் பலரின் துயரங்கள் தொடர்கின்றன - என்றார். (சி)


# 11ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் சுப்பையா ஆறுமுகராசா

தோற்றம் 08.08.1932

மறைவு 23.05.1998

திதி: துவாதசி

எனக்கென்ன மனக்கவலை
என் தாய்க்கன்றோ
தினம் தினம் என் கவலை

எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
உங்கள் நினைவுகளை என்னால்
மறக்கமுடியாது கவலையுடன்
வாழுகின்றேன்.

பிரம்படி வீதி,
கொக்குவில்.

(85409)

திருமதி ஆறுமுகராசா
சரோஜினிதேவி (மனைவி).



# நிஜமொன்று நிழலாகிய நீங்காத நினைவுகளில் ஓராண்டு......



## யோகரட்ணம் கீதன்

(JUNIOR EXECUTIVE- CEYLINCO INSURANCE COLOMBO)

ஆண்டவன் படைப்பில் 04.06.1980

கொழும்பு மண்ணில் அழிப்பு 31.05.2008

திதி: துவாதசி 21.05.2009

ஆழ்கடலில் கண்டெடுத்த முத்தே!
அன்புருவாய் வந்துதித்த தெய்வமே!
அலை மோதிச் சென்றாலும் - கீதா
உன் நினைவலைகள் அயரவில்லை எம் மனதில்
துடுப்பிழந்த தோணிபோல் தவிக்கின்றோம் உனை இழந்து
காணத் துடிக்கின்றோம் உன் பூ முகத்தை
நீயோ, நிழலாகிச் சிரிக்கின்றாய்
நான்கு சட்டக் கண்ணாடிக்குள் மறைந்திருந்து
யார் செய்த பாவமோ அழுகின்றோம் நாம் இங்கு
பார் புகழ தங்கைமார் வாழ
பக்குவமாய் வழிகாட்டி
பாதி வழி எமைவிட்டு
பரிதவித்துச் சென்றாயோ
ஆண்டுகள் 28 எம் இல்லத்தில் மழலையாகி, குழந்தையாகி, குமரனாகி
சாந்தமே உருவாக வாழ்ந்தவனே - இன்றோ
புறக் கண்களுக்கு மறைந்து எம் அகக் கண்களுக்கு மட்டும்
ஒளிவீசும் சுடராக என்றும் குமரனாய் வாழ்பவனே
நிழலான நீ மீண்டும் நிஜமாகும் வரை காத்திருக்கும்...

(85393)

18/1, காட்டுக்கந்தோர் ஒழுங்கை,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

உன் அம்மா, அப்பா,
தங்கைமார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனப்படுகொலையை தடுக்கத் தவறியமை இந்திய அரசு தமிழருக்குச் செய்த துரோகதம்

## கருணாநிதியையும் வரலாறு மன்னிக்காது



சென்னை, மே 21

நம் கண் எதிரே, நம் கைக்கு எட்டிய தூரத்தில் நடந்த தமிழினப் படுகொலை யைக் கண்டு தமிழக மக்கள் இரத்தக் கண்ணீர் வடித்தனர். உலகமே போர் நிறுத்தம் செய்ய வற்புறுத்தியும் இலங்கை அரசு அதை ஏற்கவில்லை. இந்த இனப் படுகொலையை இந்திய அரசு தடுக் கத் தவறியமை தமிழர்களுக்கு செய்த மாபெரும் துரோகமாகும். இந்தத் துரோ கத்துக்கு துணைபோன முதல்வர் கரு ணாநிதியையும் வரலாறு மன்னிக்காது.

இவ்வாறு தெரித்திருக்கிறார் தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்.

இதுகுறித்து அவர் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை வெளியிட்ட அறிக்கையின் விவரம் வருமாறு -

1948இலிருந்து இன்று வரை தமிழர்களுக்கு எந்த உரிமையையும் சிங்களவர்கள் தரவில்லை. ஜனநாயக அறவழியில் தந்தை செல்வா வழியில் உரிமைக்கான பல போராட்டங்களைத் தமிழர்கள் நடத்தி னர். ஆனால் அது கிடைக்காது என்று தெரிந்த பின்னரே, 1976இல் தமிழர்கள் வாழ தனி நாடு தேவை என்ற தீர்மானத்தை நிறைவேற்றினர்.

அதன் பின்னர் நடைபெற்ற தேர்தல்கள் அனைத்திலும் தமிழர் ஐக்கிய முன்னணியையே தமிழர்கள் தேர்வு செய்தனர். தமிழர்களுக்கு தனி நாடு தேவை என்ற ஜனநாயக ரீதியான வாக்கெடுப்பாகவே அதைக் கருத வேண்டும்.

அமைதியான அறப்போராட்டத்தால் எந்தப் பலனும் கிடைக்காதது மட்டுமல்ல தமிழர்களை இலங்கை இராணுவம் கொன்றது. அதன் விளைவாக தங்களைப் பாது காத்துக் கொள்ள தமிழ் இளைஞர்களால் உருவாக்கப்பட்டதுதான் விடுதலைப் புலிகள் இயக்கம்.

ஆனால் உலக நாடுகள் மூலம் ஆயுதங்களை வாங்கி குவித்துக் கொண்டும், இந்தியா, சீனா, பாகிஸ்தான், ஈரான் போன்ற நாடுகளின் துணையோடும் விடுதலைப் புலிகள் இயக்கத்தை அறவே அழித்துவிட்டோம் என்று இலங்கை அரசு இன்று ஆர்ப்பரிக்கிறது.

சிங்களவர்கள் கொண்டாட்டங்களில் ஈடுபட்டுள்ளனர். தமிழர்களோ இருந்ததையும் இழந்து, பிணக் குவியல்களின் மத்தியில் அலைந்து திரிகின்றனர்.

விடுதலைப் புலிகள் இயக்கத்தை வெற்றி பெற்று விட்டோம் என்று ஆர்ப்பரிக்கும் இலங்கை அரசு, தமிழர்களின் தனி நாடு கோரிக்கையைத் தவிர்த்து விட முடியாது.

ஜனநாயக ரீதியில் தந்தை செல்வா போராடினார். விடுதலைப் புலிகள் இயக்கம் ஆயுதம் ஏந்திப் போராடுகிறது. போர் முறைகளில் மாற்றம் ஏற்படலாம். ஆனால் இலட்சியத்தில் மாற்றம் ஏற்படவில்லை. இந்நிலையில் இலங்கையில் நடத்தப்பட்ட தமிழினப் படுகொலை, தனிநாடு கோரிக்கையை மேலும் தீவிரப்படுத்தியுள்ளது என்பதே உண்மை.

இலங்கையில் தமிழர்கள் சிந்திய இரத்தம் உறைந்து போய்விடாது. ஏனெனில் சிந்திய இரத்தம் என்றும் உறங்காது என்பது பொன்மொழி. கொல்லப்பட்ட தமிழர்களின் உயிர்கள் நிரந்தரமாக ஓய்ந்தும் விடாது. தனிநாடு என்ற கோரிக்கையில் போர்முறைகள் மாறலாம், ஆனால் போர் ஓயாது என்பதை இலங்கைச் சிங்களவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இலங்கையில் நடந்த இந்தத் தமிழினப் படுகொலையைக் கண்டித்து தமிழ் நாட்டு மக்கள் அனைவரும் 3 தினங்களை, துக்க நாள்களாக கடைப்பிடிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். தே.மு.தி.க.வின் கொடிகள் ஒரு வாரத்துக்கு அரைக் கம்பத்தில் பறக்கும் - என்றார்.

## பிரபாகரன் இறந்தார் என்ற செய்தியால் தமிழகத்தின் சில பகுதிகளில் வன்முறை

### உச்சக் கட்டப் பொலிஸ் பாதுகாப்பு

சென்னை, மே 21

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் மரணமடைந்தார் என வெளிவந்த செய்தியைத் தொடர்ந்து தமிழகத்தின் பல பகுதிகளில் கடந்த செவ்வாய்க்கிழமை கடையடைப்பு, பஸ்கள் மீது கல்வீச்சு உள்ளிட்ட வன்முறை சம்பவங்கள் நிகழ்ந்தன எனத் தெரிவிக்கின்றன.

இதைத் தொடர்ந்து தமிழகத்தின் அனைத்துப் பகுதிகளிலும் உச்சகட்ட கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பொலிஸாருக்கு உத்தர விடப்பட்டுள்ளது.

சேலத்தில் கார், பஸ்கள் மீது கல் வீசப்பட்டது. சட்டத்தரணிகள் உள்ளிட்ட முக்கிய பிரமுகர்களின் வீட்டின் மீது பெற்றோல் குண்டுகள் வீசப்பட்டன. இதைத் தொடர்ந்து அங்கு 25 பேர் கைது செய்யப்பட்டனர்.

பெரம்பலூர் உள்ளிட்ட மாவட்டங் களில் சில இடங்களில் பஸ்களுக்குத் தீ வைக்க கும்பல் ஒன்று முயன்றது. இதை யடுத்து அசம்பாவிதச் சம்பவங்களைத் தடுக்கும் வகையில் பொலிஸார் முன் னெச்சரிக்கையாக கைது செய்யவும் உத் தரவிடப்பட்டுள்ளது.

கடலூரில் 2ஆவது நாளாக செவ்வாய்க் கிழமையும் கடைகள் அடைக்கப்பட்டன. நெய்வேலி, சிதம்பரம், பண்ருட்டியில் சாலை மறியலில் சிலர் ஈடுபட்டனர்.

புதுவையில் கடைகள் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. மதுரை, வேலூர், தூத்துக்குடி, திருவாரூர், தஞ்சாவூர் உள்ளிட்ட மாவட்டங்களின் பல்வேறு பகுதிகளிலும், சென்னை செங்குன்றத்திலும் அரசு பஸ்களின் கண்ணாடிகள் உடைக்கப்பட்டன.

இலங்கைத் தமிழர் படுகொலையைக் கண்டித்து கோவைச் சிறையில் ம.தி.மு.க., பெ.தி.க. நிர்வாகிகள் 96 பேர் செவ்வாய்க் கிழமை உண்ணாவிரதத்தில் ஈடுபட்டனர்.

இந்நிலையில் சென்னை, கோவை, மதுரை உள்ளிட்ட முக்கிய இடங்களில் புத்த சமய அமைப்புகள், வழிபாட்டுத் தலங் களுக்கும் முக்கிய பிரமுகர்களின் வீடு, அலுவலகங்களுக்கும் பாதுகாப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

எழும்பூரில் உள்ள புத்த விகாரம், இலங்கை துணைத் தூதரகம், ஊழியர் குடி யிருப்புகளிலும், பூந்தமல்லி வீதியில் உள்ள இலங்கை வங்கியிலும் ஆயுதம் தாங்கிய பொலிஸார் பாதுகாப்புப் பணியில் ஈடு படுத்தப்பட்டுள்ளனர்.

ஸ்ரீபெரும்புதூரில் உள்ள ராஜீவ் காந்தி நினைவிடத்தில் 21ஆம் திகதி அவரது நினைவு தினத்தைக் கடைப்பிடிக்க பல்வேறு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

## குண்டு துளைக்கப்பட்ட படகு நாகைக் கடற்பகுதியில் மீட்பு

நாகப்பட்டினம், மே 21

துப்பாக்கிக் குண்டுகள் துளைக்கப்பட்ட 'பைபர்' படகு ஒன்று நாகை கடல்க் பகுதியிலிருந்து மீட்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக் கப்படுகிறது.

நாகை சேவாபாரதி சுனாமி குடியிருப்புப் பகுதியைச் சேர்ந்த மீனவர்கள் கா. மணிவேல், க.கிருஷ்ணராஜ், கி. செந்தில், கா. சிங்காரவேலு ஆகியோர் கடந்த 17ஆம் திகதி கடலுக்குள் மீன்பிடிக்கச் சென்றனர்.

இவர்கள் மீன் பிடித்து விட்டுத் திரும்பிய போது நாகை கடல் பரப்புக்கு அருகே 'பைபர்' படகு ஒன்று மூழ்கிய நிலையில் கடலில் மிதப்பதைக் கண்டனர்.

இதையடுத்து, மீனவர்கள் 4 பேரும் அந்தப் படகை தங்கள் படகில் இணைத்து நாகை கீச்சாங்குப்பம் கடற்கரைக்குக் கொண்டு வந்தனர்.

பின்னர் இதுகுறித்து அவர்கள் அளித்த தகவலின் பேரில், நாகை கடலோரப் பாதுகாப்புக் குழும பொலிஸார் சென்று, அந்தப் படகைக் கைப்பற்றினர்.

அந்தப் படகில் பல இடங்களில் துப்பாக்கிக் குண்டுகள் துளைக்கப்பட்டி ருந்தன. சுமார் 18 அடி நீளம், 4.5 அடி அகலத்தில், நீல நிறத்தில் இருந்த அந்தப் படகில் இல்லை.

இந்தப் படகு யாருக்குச் சொந்தமானது என்ற விவரங்கள் உடனடியாகத் தெரியவில்லை.

இதுகுறித்து நாகப்பட்டினம் கடலோரப் பாதுகாப்புக் குழும காவல் நிலையத்தில் கடந்த திங்கட்கிழமை வழக்குப் பதிவு செய்யப்பட்டது.

## மீண்டும் பிரதமராக மன்மோகன்; நாளை வெள்ளியன்று பதவியேற்பு

புதுடில்லி, மே 21

இந்தியப் பிரதமராக மன்மோகன் சிங் நாளை பதவியேற்பார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மக்களவைத் தேர்தலில் வெற்றிபெற்ற காங்கிரஸ் எம்.பிக்களின் (காங்கிரஸ் நாடாளுமன்ற கட்சி) கூட்டம் நாடாளுமன்ற மத்திய மண்டபத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. புதிதாக அமையும் அரசுக்கு மன்மோகன் சிங் மீண்டும் தலைமையேற்க வசதியாக அவரை காங்கிரஸ் நாடாளுமன்ற கட்சித் தலைவராக நியமிப்பது என கட்சித்தலைவர் சோனியா காந்தி அறிவித்தார்.

பொதுவாழ்வில் நேர்மை, திறமையான ஆட்சி இதைத்தான் மக்கள் எதிர்பார்க்கிறார்கள். அதை எதிர்பார்த்தே வாக்காளர்கள் காங்கிரஸ் கூட்டணியை ஆட்சியில் அமர்த்தியுள்ளனர், அவர்களது நம்பிக்கையை நாம் ஏமாற்றக்கூடாது என்று கூட்டத்தையடுத்து சோனியாகாந்தி தெரி வித்தார்.

## பிரபாகரன் இறந்தமையை உறுதிசெய்ய அவரது மரபணு இந்தியா அனுப்பப்படுமா?

### அதிகாரிகள் மத்தியில் பரபரப்பு பேச்சு

சென்னை, மே 21

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் இறந்ததை மரபணுப் பரிசோ தனை மூலம் உறுதி செய்ய அவரின் உடலில் உள்ள மரபணுக்கள் சென்னையில் உள்ள தடய அறிவியல் துறைக்குக் கொண்டுவரப்படுமா என்பதுபற்றி அதி காரிகள் மத்தியில் பரபரப்பாகப் பேசப்படுகிறது என அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதுகுறித்து வெளியான தகவல்கள் வருமாறு -

பிரபாகரனின் உடல் முதலில் கண்டு பிடிக்கப்படவில்லை. மகனின் உடலை கண்டுபிடித்துவிட்டோம் என இலங்கை இராணுவம் அறிவித்தது. அதுதொடர்பான புகைப்படங்களும் வெளியிடப்பட்டன.

இதனால் பிரபாகரன் சாகவில்லை என்றும், அவர் உயிரோடு இருக்கிறார் எனவும் தகவல்கள் வெளியாகின.

இந்த நிலையில், நேற்றுமுன்தினம் காலையில் பிரபாகரனின் உடல் கண்டு பிடிக்கப்பட்டது என இலங்கை இராணுவம் அறிவித்தது. பிரபாகரன் உடலின் புகைப் படத்தையும், வீடியோ படங்களையும் இலங்கை இராணுவம் வெளியிட்டது. அதையும் விடுதலைப்புலிகளின் ஆதர வாளர்கள் ஏற்கவில்லை.

எனவே போரில் பிரபாகரனும், அவரது மகனும் இறந்தமையை விஞ்ஞான ரீதியாக தடய அறிவியல் பரிசோதனை மூலம் உறுதி செய்வதற்கு பிரபாகரனின் உடலிலும், அவரது மகனின் உடலிலும் உள்ள மரபணுக்களை எடுத்து சோதனை செய்ய இலங்கை அரசு திட்டமிட்டுள்ளது.

எனவே பிரபாகரனின் உடலில் உள்ள மரபணுவும், அவரது மகனின் உடலில் உள்ள மரபணுவும் இந்தியாவில் உள்ள தடய அறிவியல் துறைக்கு இலங்கை அரசால் அனுப்பி[illegible] எதிர்பார்க்கப்படுகிறது.

## மஹிந்தவை போர்க் குற்றவாளியாக ஐ.நா. சபை அறிவிக்க வேண்டும்

### தொல்.திருமாவளவன் கோரிக்கை



சென்னை, மே 21

இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை போர்க் குற்றவாளியாக ஐக்கிய நாடுகள் சபை அறிவிக்க வேண்டும் - என்று விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல். திருமாவளவன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கையில் வாழும் ஈழத் தமிழர்களின் வாழ்வுரிமையைப் பாதுகாக்கவும், அவர்களுக்கு தேவையான உதவிகளை இந்திய அரசு உடனே செய்ய வேண்டும் என்பதை வலியுறுத்தியும் திராவிடர் கழகம் சார்பில் சென்னையில் நேற்றுமுன் தினம் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

பின்னர் செய்தியாளர்களுக்கு பேட்டியளித்தபோதே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார். மேலும் அவர் கூறியவை வருமாறு -

இலங்கை இராணுவம் கொடுமையின் உச்சக் கட்டத்திற்குச் சென்றதால் நிறைய போராளிகள் இறந்துள்ளனர். அவர்களுக்கு வீரவணக்கம் செலுத்துகிறோம்.

ஈழத் தமிழர்கள் பல்வேறு கொடுமைகளுக்கு இன்னும் ஆளாக்கப்படுகிறார்கள். எனவே, இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை போர்க் குற்றவாளியாக அறிவிக்க வேண்டும் என்று ஐ.நாவை வலியுறுத்துகிறோம்.

இலங்கையில் வாழும் தமிழர்களுக்கு புது வாழ்வு கிடைக்க வேண்டும். அவர்களுக்கு உணவு, மருந்து தேவைப்படுகின்றன. அதற்கான முயற்சிகளை இந்தியா எடுக்க வேண்டும்.

சர்வதேச சட்டதிட்டங்களுக்கு அடிபணிய மாட்டேன் என்று இலங்கை ஜனாதிபதி கூறியுள்ளார். இது அவருடைய ஆணவத்தைக் காட்டப்படுகின்றது- என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

1088 நீலம்

வெற்றி இலக்கங்கள்

தனுசு 08 13 28 42

19-05-2009

ஜக்பொட் பரிசு ரூபா. 3,837,000/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 196,039 | 20/- | 3,920,780/- |
| 2 இலக்கங்கள் | 18,026 | 40/- | 721,040/- |
| 1 இல. + லக்கினம் | 18,004 | 60/- | 1,080,240/- |
| 2 இல. + லக்கினம் | 1,631 | 200/- | 326,200/- |
| 3 இலக்கங்கள் | 486 | 1000/- | 486,000/- |
| 3 இல. + லக்கினம் | 50 | 10,000/- | 500,000/- |
| 4 இலக்கங்கள் | 1 | 200,000/- | 200,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 3,837,000/- | - |
| மொத்தம் | | | 7,234,260/- |
| வெற்றிபெறாத டிக்கட்டுகளுக்கான பரிசு | 5 | 100,000/- | 500,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 234,242 | | 7,734,260/- |

இந்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 4,713,050/-

2009 மே 22 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சிவப்பு நிற டிக்கட்டுக்கள் சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் வெற்றி பெறாத டிக்கட்டுகளில் இருந்து ரூபா 100,000/- பரிசு பெறும் சீட்டுக்கள்.

| | |
|---|---|
| கொழும்பு | 400157460-3-33 |
| கம்பஹா | 400152477-1-29 |
| பதுளை | 400144340-2-48 |
| களுத்துறை | 400146632-7-01 |
| மாத்தளை | 400150627-0-05 |

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை


# கூட்டங்கள்

யாழ்ப்பாணம், மே 21

மானிப்பாய் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் எதிர்வரும் 7 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கல்லூரியின் வாகீசர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகிய பதவிகளுக்கு வேட்புமனுக்களும் பிரேரணைகளும் எதிர்வரும் 3 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் ஒருமணிக்கு முன்பதாக செயலாளருக்கு அனுப்பிவைக்குமாறு மேற்படி சங்கச் செயலாளர் அறிவித்துள்ளார். (201)

* * *

யாழ்ப்பாணம், மே 21

தென்மராட்சி கலைமன்றப் பொதுக் கூட்டம் எதிர்வரும் சனி, ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு சிவன் கோயிலடியில் உள்ள கலைமன்ற மண்டபத்தில் நடைபெறும்.

பிதேச கலை இலக்கிய ஆர்வலர்கள், மன்ற பொதுச் சபை உறுப்பினர்கள், நலன் விரும்பிகள் ஆகியோரைக் கலந்து கொள்ளுமாறு மன்ற செயலாளர் வை. இராசரத்தினம் அறிவித்துள்ளார். (203-207)

# பரீட்சை மண்டபம் இடமாற்றம்

யாழ்ப்பாணம், மே 21

சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் எதிர்வரும் 23, 24, 30, 31 ஆம்ஆகிய திகதிகளில் நடத்தப்படவிருந்த இந்து தர்மாசிரியர் பரீட்சை 2007/ 2008 (2009) மண்டபம் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரிக்கு மாற்றப்பட்டுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் அறிவித்துள்ளார். (203-207)

## தவறிவிட்டது

சுதுமலை தெற்கு, மானிப்பாய் என்னும் முகவரியுடைய றங்கநாதன் பேரின்பமலர் என்பவரது தே. அ.அட்டை (505892747V) விசேட அ.அட்டை மற்றும் சில முக்கிய ஆவணங்கள் அடங்கிய கறுப்பு நிற பேர்ஸ் கடந்த 12.05.2009 அன்று தாவடிச் சந்தியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தாவடிச்சந்தியில் உள்ள மலர் கடையில் ஒப்படைத்துதவவும் சன்மானம் வழங்கப்படும். (85424)

# அதிபர், ஆசிரியர்களுக்கான செயலமர்வு இன்று

யாழ்ப்பாணம், மே 21

யாழ்.கல்வி வலயத்துக்குட்பட்ட தெரிவு செய்யப்பட்ட பாடசாலை அதிபர், ஆசிரியர்களுக்கான கட்டாயக் கல்வி வரவுக் குழுக்களை வலுப்படுத்தும் செயலமர்வு இன்று வியாழக்கிழமை காலை 8.30 மணிமுதல் பிற்பகல் 4 மணிவரை யாழ். வலய முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தெரிவுசெய்யப்பட்ட பாடசாலை அதிபர், ஆசிரியர்களை தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ். வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம் அறிவித்துள்ளார். (9)

# கேள்வி அறிவித்தல்

"பிரதிப் பொது முகாமையாளர் (வடக்கு) அலுவலகத்துக்கு தரவுப் பதிவினர் மற்றும் எழுதுவினைஞர் சேவையை மனித வலு நிறுவனங்கள் ஊடாக பெற்றுக்கொள்ளல்"

"Obtaining Service of Data Entry Operators and Clerks for Deputy General Manager (North)'s office through Manpower Agency"

**கேள்வி இல:. NP/DGM/2009/15**

மனித வலு முகவர் நிலையங்களிடமிருந்தும் (Manpower Agency) மற்றும் அங்கீகாரம் பெற்ற கணனி கற்கை நிறுவனங்களிடமிருந்து (Recognized computer Training Centers) மேல் குறிப்பிடப்பட்ட சேவைக்கான அரக்கு முத்திரை இடப்பட்ட கேள்வி(Tender) 22.06.2009 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிவரை இலங்கை மின்சாரசபை (வடமாகாணம்) மாகாணப்பெறுகை குழுத் தலைவரால் ஏற்றுக் கொள்ளப்படும்.

கேள்வியாளர்கள், கேள்விப்பத்திரங்களை ரூபா 1000.00 (ஆயிரம்) க்கான கொடுத்தல் பத்திரத்தினை எமது அலுவலகத்தில் பெற்று வங்கியில் பணத்தினைச் செலுத்துவதன் மூலம், அல்லது பொது முகாமையாளர், இலங்கை மின்சாரசபை, கொழும்பு. என்ற பெயரில் பெறப்பட்ட வங்கிக்கட்டளையாகவோ சமர்ப்பித்து இல : 500, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம் என்னும் விலாசத்தில் உள்ள பிரதிப் பொதுமுகாமையாளர், (வடமாகாணம்) அலுவலகத்தில் 2009 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 19ஆம் திகதி வரைவேலை நாள்களில் காலை 9.00 தொடக்கம் பி.ப 3.00 வரை பெற்றுக் கொள்ளலாம்.

கேள்விகள் 22.06.2009 பிற்பகல் 2.00 மணிக்கு "பிரதிப் பொது முகாமையாளர் (வடக்கு), இலங்கை மின்சாரசபை, 500, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்." அலுவலகத்தில் திறக்கப்படும். அத்தருணம் கேள்வியாளர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்டவர் சமுகமளிக்கலாம்.

கேள்வியாளர்கள் இலங்கை மின்சார சபையிலிருந்து பெறப்பட்ட கேள்விப் பத்திரங்களில் மாத்திரம் இணைப் பிரதிகளில் (Duplicate) பூர்த்தி செய்து, கடித உறையிலிட்டு, அதன் இடது பக்கமேல் மூலையில் "பிரதிப் பொது முகாமையாளர் (வடக்கு) அலுவலகத்துக்கு தரவுப் பதிவுனர் மற்றும் எழுதுவினைஞர் சேவையை மனித வலு நிறுவனங்கள் ஊடாக பெற்றுக்கொள்ளல்" எனக் குறிப்பிட்டு மேற்குறித்த முகவரிக்கு 22.06.2009 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு முன்னர் கிடைக்கும் படி பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கப்பட வேண்டும். அல்லது இவ் அலுவலகத்தில் உள்ள அலுவலகத்தில் உள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். இவ்வறிவித்தல் தொடர்பான மேலதிக விவரங்களைக் கீழ்க்குறிப்பிட்ட விலாசத்தில் உள்ள பிரதம பொறியியலாளர் (வாணிபம்) வடக்கு அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் அறிந்து கொள்ளலாம்.

**மாகாணப் பெறுகைக் குழு (வடமாகாணம்)**
**பிரதிப்பொது முகாமையாளர் அலுவலகம்,**
**இலங்கை மின்சாரசபை,**
**இல: 500, கே.கே.எஸ் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

தலைவர்,
மாகாணப் பெறுகைக் குழு
(வடமாகாணம்)..

*தொலைபேசி: 021-222 2496*
*021-222 3233*
*தொலைநகல்: 021-222 2497*

*"சூழல் அபிவிருத்தி வேலைகளுக்கு கை கொடுக்கும்"*
*இலங்கை மின்சாரசபை.*

# ஓராண்டு நினைவஞ்சலி



மண்ணில் 13.01.1941

விண்ணில் 31.05.2008

## செல்வி புஸ்பரத்தினவதி இராசரத்தினம்

திதி:வைகாசித் திங்கள்
அபரபக்க துவாதசி.
இன்று (21.05.2009) வியாழக்கிழமை.

"தனக்கென வாழப்
பிறர்குரியதான வாழ்வு;
பாசம், அன்பு, தியாகம் எனும்
சொற்களைக் கேட்கும் தோறும்
எமக்குத் தெரிவது உங்கள்
தெய்வத் திருவுருவமே"

அஞ்சலிப்பவர்கள்:
பேராசிரியர் இரா.சிவசந்திரன் (சகோதரன்),
திருமதி புஷ்பா கணேசலிங்கம் (சகோதரி)
மற்றும் உறவினர்கள்.

இல.07, இரத்தினம் ஒழுங்கை,
கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: 021 222 4398 (85423)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
## சின்னக்குட்டி சின்னத்துரை

பிறப்பு:-10.10.1937

இறப்பு:-01.06.2008

*திதி: துவாதசி(21.05.2009)*

பாசத்தைப் பொழிந்து அறிவைப் பெருக்கி அன்புடன் வளர்த்து
உங்களை உருக்கி எங்களை உருவாக்கிய அருமைத் தந்தையே!
உங்கள் பாசத்திற்கும் பரிகாரம் கடலளவு என்றாலும்
எங்களின் இறுதி மரியாதையைத் தெரிவிக்கின்றோம்
தங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

*என்றும் உங்கள் பிரிவால் துயருறும்:*
மனைவி, மகன்மார், மகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளை,
மற்றும் உற்றார், உறவினர்கள்.

குடமியன்,
வரணி. (85388)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு 16 ★ 12 ★ 1969



இறப்பு 21 ★ 04 ★ 2009

கடந்த 21.04.2009 அன்று அகால மரணமடைந்த
எங்கள் குடும்ப விளக்கு

## அமரர் ஜெயச்சந்திரன் ஜெயவதனா (குட்டியா)

அவர்களுக்கு எமது கண்ணீர்க் காணிக்கைகள்

தாயாக வாழ்ந்தாய்
மகிழ்வோடு நாமிருந்தோம்
தீயோடு சேர்ந்தாய்
எரிகிறதே எம் நெஞ்சம்
பாயோடு படுத்தாலும்
நீதானே நினைவெல்லாம்
வாயோடு புலம்புகின்றோம்
வருவாயோ மறு பிறப்பாய்?

இன்று (21.05.2009) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டி நிகழ்விலும், மதிய போசனத்திலும் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திக்குப் பிரார்த்திக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

சம்புளியவத்தை,
ஊறணி, வல்வெட்டித்துறை. (85425)

அன்புத்துணைவர்
ஜெயச்சந்திரன் (ஜெயராம்),
மகன் - குமணன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் போராட்டத்தில் வெற்றி காண தமிழ்க் கூட்டமைப்புத் தொடர்ந்தும்

## பூரணத்துவமான தீர்வையே அரசு முன்வைக்க வேண்டும்



கொழும்பு, மே 21

இலங்கைத் தீவில் நீண்ட நெடுங்கால வரலாறு கொண்ட எமது தமிழ்த் தேசிய இனம், கௌரவமும் பாதுகாப்பும் கொண்ட அமைதிவாழ்வைத் தனக்கென அமைத்துக் கொள்வதற்கான அரசியல் போராட்டத்தில் வெற்றி அடைவதற்கு ஏதுவாக பொறுப்புணர்வோடும் உறுதியோடும் தமிழ் தேசியக் கூட்டமைப்புத் தொடர்ந்தும் செயற்படும்.

தமிழ்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் என்.ஸ்ரீகாந்தா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

போர் முடிந்து விட்டதாக அரசாங்கம் அறிவித்திருக்கின்றது. இந்த முடிவு எதிர்பார்க்கப்பட்ட நிகழ்வுதான்.

கடந்த மார்கழி - தை மாத காலகட்டத்தில் போரின் போக்கு அரசுப் படைகளுக்கு சாதகமான முறையில் தீர்க்கமாக மாறியதிலிருந்து இந்த நிகழ்வு எதிர்பார்க்கப்பட்டிருந்தது.

ஆனால் நீண்ட கால ஆயுத மோதலில் அரசுப் படைகளின் இராணுவ வெற்றி என்பது அந்த மோதலுக்கு அடிப்படைக் காரணமான அரசியற் பிரச்சனைக்கு தீர்வாக இருக்க முடியாது.

இலங்கைத் தீவில் சமாதானத்தையும் அமைதியையும் நிரந்தரமாக உறுதிப்படுத்தக் கூடியதும் யதார்த்தபூர்வமானதுமான ஓர் அரசியல்தீர்வு மூலமே இந்த நாட்டின் தேசியப் பிரச்சினைக்கு தீர்வுகாண இயலும்.

இந்த பிரச்சினைக்கு தீர்வு தரக்கூடிய ஓர் அரசியல் தீர்வுத் திட்டத்தை உருவாக்க முடியுமா? என்பதே இன்றுள்ள மிகப் பெரிய அரசியல் கேள்வி ஆகும்.

**பூரணத்துவமான தீர்வு தேவை**

இந்த அரசியற் சவாலை ஆக்கபூர்வமாக சந்திக்கக்கூடிய விதத்தில், தமிழ் மக்களின் நீண்ட கால அரசியல் மனக்குறைகளையும் கவலைகளையும் தீர்த்து வைக்கக் கூடியதும் பூரணத்துவமான ஓர் தீர்வுத் திட்டத்தை முன் வைப்பதற்கு ஜனாதிபதியும் அவரின் தலைமையிலான அரசாங்கமும் விரைவாக முன்வர வேண்டும்.

அதே நேரத்தில் போரின் விளைவாக இனிய உறவுகளை இழந்து, உடல்- உளக் காயங்களைச் சுமந்து, அகதிகளாக அல்லற்பட்டுக் கொண்டிருக்கும் லட்சக்கணக்கான எமது மக்களின் உடனடித் தேவைகளும் புனர்வாழ்வும் மீள்குடியேற்றமும் பாரிய மனிதாபிமான பிரச்சனைகளாக எதிர் நிற்கின்றன. இதற்கும் விரைவில் தீர்வு கண்டாக வேண்டும்.

வரலாற்றை எவரும் திருத்தி எழுத முடியாது. அதே போல வரலாறு மீண்டும் நிகழ்வதற்கும் அடிகோலக் கூடாது.

இலங்கைத் தீவில் நீண்ட நெடுங்கால வர லாறு கொண்ட எமது தமிழ்தேசிய இனம் கௌரவமும் பாதுகாப்பும் கொண்ட அமைதி வாழ்வை தனக்கென அமைத்துக் கொள்வதற்கான அரசியல் போராட்டத்தில் வெற்றி அடைவதற்கு ஏதுவாக தமிழ் தேசியக் கூட்டமைப்பு பொறுப்புணர்வோடும் உறுதியோடும் தொடர்ந்து செயற்படும்-என்றுள்ளது.



யுத்த வெற்றியைக் கொண்டாடும் விதத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வீதியில் இறங்கி பொது மக்களைச் சந்தித்தபோது......

### நல்லையில் மணவாளக் கோலம் இன்று

அழகினுக் கழகாய் நல்லை வந்து
அமர்ந்த நல் வேலவனுக்கு
களங்கமில் வள்ளி தெய்வயானை சூழ
களிப்புறும் நன் நாளின்று
அழகனின் மணவாளக் கோலம் காண
அன்னையோடு அரனும் வந்தே
உளமகிழ் அடியாற் கெல்லாம்
உவந்திட ஆசி நல்க
களிப்புற்று கானமாமயில் மீதேறி
கந்தவேள் உலா வருவான்
அளப்பெரும் இக்காட்சி காண
அடியவர் திரண்டு வாரீர்!

-விகடகவி-

# வடக்கை முற்றாக மீட்டுவிட்டோம் அரசியல் தீர்வு இனித் தேவையில்லை

## தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் கூறுகிறது!

கொழும்பு, மே 21

படையினர் வடக்கு - கிழக்கை முற்றாக மீட்டுவிட்டனர். இனி அப்பகுதிகளுக்கு அரசியல் தீர்வு என்ற ஒன்று தேவையில்லை. எமது இராணுவத்தினர் தீர்வை முன்வைத்து விட்டார்கள். அதைவிடப் பொருத்தமான தீர்வு எதுவுமில்லை என்று தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று அந்த அமைப்பு நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அந்த அமைப்பின் தலைவர் டாக்டர் குணதாஸ அமரசேகரவே இதைத் தெரிவித்தார். அவர் மேலும் கூறியவை வருமாறு:-

நடந்து முடிந்த யுத்தம் அப்பாவித் தமிழ் மக்களுக்கோ அல்லது பிரபாகரனுக்கோ எதிரானது அல்ல. எமது நாட்டைப் பிரித்துப் பிரபாகரனிடம் ஒப்படைப்பதற்குத் திட்டமிட்ட சர்வதேச ஏகாதிபத்தியத்துக்கு எதிரானதுதான் இந்த யுத்தம்.

ஏகாதிபத்திய நாடுகள் இந்த நாட்டை இரண்டாகப் பிரித்து அதில் ஒரு பகுதியைப் பிரபாகரனின் கையில் கொடுக்க முற்பட்டன. அந்த நாடுகள் எமது படையினரின் யுத்த நடவடிக்கையால் தோற்கடிக்கப்பட்டுள்ளன. பிரபாகரன் அந்த நாடுகளின் கைக்கூலியாகத்தான் செயற்பட்டார். அந்தக் கைக்கூலியையும் எமது படையினர் கொன்றொழித்துவிட்டனர்.

இருப்பினும், எமது நாட்டைப் பிரிக்கும் அந்த நாடுகளின் நோக்கம் கைவிடப்படவில்லை. வேறு மார்க்கமாக அந்தத் திட்டம் எமது நாட்டுக்குள் நுழைய இடமுண்டு. அரசு இந்த விடயத்தில் மிக அவதானமாக இருக்கவேண்டும்.

படையினர் வடக்கு - கிழக்கை முற்றாக மீட்டுவிட்டனர். இனி அப்பகுதிகளுக்கு அரசியல் தீர்வு என்ற ஒன்று தேவையில்லை. எமது இராணுவத்தினர் தீர்வை முன்வைத்துவிட்டார்கள். இதைவிடப் பொருத்தமான தீர்வு எதுவுமில்லை.

இப்போது அழிந்துபோயுள்ள வடக்கை அபிவிருத்தி செய்வதுதான் அரசின் ஒரேயொரு பாரிய பொறுப்பு. அதை அரசு சரிவரச் செய்யவேண்டும். அந்த அபிவிருத்தி நடவடிக்கையின் போது சர்வதேச அமைப்புகள் எவற்றையும் அரசு வடக்கிற்குள் நுழைய அனுமதிக்கக்கூடாது.

இச்சந்தர்ப்பத்தில் எமது யுத்தம் வெற்றிகரமாக முடிவடைவதற்கு அனைத்து உதவிகளையும் வழங்கிய சீனா, ரஷ்யா ஆகிய நாடுகளை நாம் ஒருபோதும் மறக்கக்கூடாது - என்றார். (அ-சி)

# ராஜஸ்தான் அணியின் அரையிறுதிக் கனவைத் தகர்த்து ஆறுதல் வெற்றிகளுடன் வெளியேறுகிறது கொல்கத்தா

டர்பன், மே 21

ராஜஸ்தான் அணியின் அரையிறுதிப் போட்டிக் கனவைத் தகர்த்து ஆறுதல் வெற்றிகளுடன் வெளியேறியது கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி.

ஐ.பி.எல். ருவன்ரி-20 போட்டிகளில் நேற்று நடைபெற்ற ஓர் ஆட்டத்தில் ராஜஸ்தான் றோயல்ஸ் அணியை எதிர்கொண்ட கொல்கத்தா நைட் ரைடர்ஸ் 4 விக்கெட்டுக்களால் ராஜஸ்தான் அணியை வீழ்த்தியது.

தென்னாபிரிக்காவில் நடைபெற்றுவரும் இரண்டாவது ஐ.பி.எல் ருவன்ரி-20 போட்டிகளின் 53 ஆவது ஆட்டம் நேற்று டர்பனில் கிங்ஸ்மேற் மைதானத்தில் நடைபெற்றது. இதில் மெக்கலம் தலைமையிலான கொல்கத்தா நைட் ரைடர்ஸும், ஷேன்வோர்ன் தலைமையிலான ராஜஸ்தான் ரோயல்ஸும் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மெக்கலம் முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தார்.

முதலில் துடுப்பெடுத்தாட ஆரம்பித்த ராஜஸ்தானின் ஆரம்ப வீரர்களான நமன் ஒஜா 12 பந்துகளில் மூன்று சிக்ஸர்களுடன் 22 ஓட்டங்களைப் பெற்ற போதும் மற்றொரு ஆரம்ப வீரரான கியானி ஓர் ஓட்டத்துடன் ஆட்டமிழந்தார். அஷ்நோட்கர் 4 ஓட்டங்களுடன் 'ரன் அவுட்டானார்'. என்.கே. பட்டேல் 14 ஓட்டங்களுடன் லன்வெல்த்தின் பந்தில் கங்குலியிடம் பிடிகொடுத்து வெளியேறினார்.

போத்தா 8 ஓட்டங்களுடன் அகார்கரினால் 'போல்ட்' செய்யப்பட்டு வெளியேற ராஜஸ்தான் அணி சரிவு நோக்கி செல்லும் போது அதனைத் தூக்கி நிறுத்திய யூசுப் பதான் இம்முறை9ஓட்டங்களுடன் 'ரன் அவுட்டானார்.' ஜடேஜா 14 ஓட்டங்களுடன் ஹென்டர்ன் ஓட்டம் எதனையும் பெறாமலும் அணித்தலைவர் ஷேன் வோர்ன் 18 ஓட்டங்களுடனும் பெவிலியன் திரும்பினர்.

முனால்ப் பட்டேல் 5 ஓட்டங்களுடனும் அமிற் சிங் ஓர் ஓட்டத்துடனும் களத்தில் இருந்தனர். ராஜஸ்தான் றோயல்ஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுகளை இழந்து 101 ஓட்டங்களைப் பெற்றது.

கொல்கத்தா நைட் ரைடர்ஸ் சார்பில் பந்து வீசிய லங்வெல்ட்த் 3 விக்கெட்டுக்களையும் அகார்கர் 2 விக்கெட்டுக்களையும், சர்ஹார் ஒரு விக்கெட்டினையும் கைப்பற்றினர்.

.102 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலகுவான வெற்றி இலக்கைத் துரத்த ஆரம்பித்த கொல்கத்தா நைட் ரைடர்ஸின் ஆரம்ப வீரர்களான மெக்கலம் 9 ஓட்டங்களுடன் கங்குலி ஓட்டமெதனையும் பெறாமலும் அடுத்தடுத்து வெளியேறினர்.

ஹோட்ஸ் (6), யஷ்பல் சிங் (6), ஹஸி (9) என வெளியேற சுக்லா ஆட்டமிழக்காமல் 48 ஓட்டங்களை 3 பௌண்டறிகள் 2 சிக்ஸர்கள் அடங்கலாகப் பெற்றார். ஷைஹ் 6 ஓட்டங்களுடன் 'ரன் அவுட் முறையில் ஆட்டமிழக்க அகார்கர் ஆட்டமிழக்காமல் 13 ஓட்டங்களைப் பெற்றார்.

கொல்கத்தா அணி 19.3 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கான 102 ஓட்டங்களைப் பெற்றது.

ராஜஸ்தான் சார்பில் பந்து வீசிய முனால்ப் பட்டேல், போத்தா ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் அமிற் சிங் ஒரு விக்கெட்டினையும் கைப்பற்றினர்.

ஆட்டநாயகனாக சுக்லா (கொல்கத்தா நைட் ரைட்ர்ஸ்) தெரிவானார்.

இவ்வெற்றியுடன் இறுதியாக விளையாடிய 2 போட்டிகளிலும் வெற்றிகளைப் பெற்ற கொல்கத்தா வெளியேறுகின்றது. இப்போட்டியில் வெற்றி பெற்றால் அரையிறுதிக்குள் தெரிவாகலாம் என்ற நம்பிக்கையுடன் இருந்த நடப்பு சம்பியனின் கனவு கலைந்துவிட்டது.

கடந்த வருடத்தில் அதிரடியாக நுழைந்து இறுதிப்போட்டியில் அசத்தலான வெற்றியைப் பெற்ற ராஜஸ்தானால் இம்முறை அரையிறுதிக்குள் கூட நுழைய முடியாது வெளியேறுகிறது. (6)

# 'ஆஷஸ்' தொடரில் சைமன்ஸ் நீக்கம் வட்சன், மெக்டொனால்ட் விளையாடுவர்

சிட்னி, மே 21

இங்கிலாந்து, அவுஸ்திரேலிய அணிகளுக்கு இடையே இடம் பெறும் 'ஆஷஸ்' தொடருக்கான அணி விவரம் அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் சைமன்ஸ்க்கும் ஷேன் வட்சனுக்கும் இடையில் கடுமையான போட்டி நிலவியது. அணிக்கு சைமன்ஸ் தெரிவு செய்யப்படவில்லை.

சகலதுறை வீரர் மெக்டொனல்டிற்குப் பதிலாக சைமன்ஸ் அணியில் இடம் பெறுவார் என எதிர்பார்க்கப்பட்ட போதும் அவர் இணைக்கப்படாமல் ஷேன் வட்சன், மெக்டொனால்ட் இருவருக்கும் அணியில் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை சைமன்ஸின் டெஸ்ட் எதிர்காலம் முடிந்து விட்டது என அவுஸ்திரேலிய ஊடகங்கள் ஊகம் வெளியிட்டுள்ளன.

அணியின் விவரம்:- ரிக்கி பொண்டிங், மைக்கல் கிளார்க், பிராட்ஹெடின், ஸ்டூவர்ட் கிளார்க் , நெதன் ஹரிட்ஸ், பென் ஹில்ஃபென்ஹாஸ், பிலிப் ஹியூஸ், மைக்கல் ஹஸி, மிச்செல் ஜோன்சன், சைமன் ஹேடிக், பிரட்லீ, மெக்டொனால்ட், மெனுமார்க்கஸ் நார்த் , பீற்றர்சிடில், ஷேன் வட்சன். (6)

### ...நாட்டில் உள்ள....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

யாழ் மக்களின் சமாதான வாழ்க்கை நிலையை சீர்குலைக்கத் தயாராக இருக்கும் விடுதலைப்புலி உறுப்பினர்களுக்கு பாதுகாப்பு மற்றும் தங்குமிட வசதிகள் உள்ளிட்ட வேறு தேவைகளை நிறைவேற்று வதற்காக உதவி புரிவது தவறு என்று பொது மக்களுக்கு அறியத் தருவதோடு, அவர்கள் உங்களின் உறவாக அல்லது நண்பர்களாக இருந்தாலும் அவர்களின் எதிர்காலத்தை வளமாக்கிக் கொள்வதற்காகஇராணுவத்திடம்சரண்அடைவதற்கு தேவையான செயற்பாடுகளைச் செய்யுங்கள்.

சரண் அடைபவர்கள் எவ்வித , பயமும் சந்தேகமும் இன்றி அதனைச் செய் யலாம். உங்களால் அவர்களைச் சரண டையச் செய்ய முடியாவிட்டால் புலனாய்வு தகவலின் படி அவர்கள் கைது செய்யப்பட்டால் அவர்களுக்கு பாதுகாப்பு அளித்த நீங்களும் குற்றவாளி யாக நீதிமார்க்கப்படி கணிக்கப்படுவீர்கள்.

பயங்கரவாதச் செயலுக்கு தொடர்புடையவர்களின் புனர்வாழ்வு நிமிர்த்தம் அரசாங்கம் செய்திருக்கும் இந்த நற்செயற் திட்டத்திற்கு உங்களதும், மற்றவர்களினதும் ஒத்துழைப்பும் துணையும் முழுமையாகக் கிடைக்க வேண்டும் என அறியத் தருகின்றேன்- என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகதிகள் 2 வருடங்களுக்கு மேலும் முகாம்களில் தங்க நேரிடலாம்; இது விடயத்தில் ஐ.நா. சபை அரசுக்கு உத்தரவிட முடியாது என்கிறார் அதிகாரி

கொழும்பு, மே 21

வவுனியா நலன்புரி முகாம்களில் உள்ள மக்கள் இன்னும் இரு வருடங்களுக்கு அங்கு தங்கவைக்கப்படலாம் என அரச அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

அந்த முகாம்களில் மேலும் எவ்வளவு காலத்திற்கு பொதுமக்கள் தங்கவைக்கப் பட வேண்டும் என்பது குறித்து ஐ.நா., அரசிற்கு கட்டளை பிறப்பிக்க முடியாது என்றும் அந்த அதிகாரி குறிப்பிட்டுள்ளார் என்று பிரிட்டிஷ் பத்திரிகை 'கார்டியன்' செய்தி வெளியிட்டுள்ளது.

தேசிய பாதுகாப்பு ஊடக நிலையத்தின் பணிப்பாளர் லக்ஷ்மன் குலுகல்லேயே இந்தத் தகவலைத் தெரிவித்தார் என்றும் அந்தப் பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

இதுகுறித்து லக்ஷ்மன் குலுகல்லே தெரிவித்தார் என அந்தப் பத்திரிகையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

''மக்கள் எப்போது விடுவிக்கப்பட வேண்டும் என்பது குறித்து அரசு எடுக்கும் முடிவை ஐ.நா. ஏற்கவேண்டும். அவர்கள் எங்களுக்கு எந்த நிபந்தனையையும் விதிக்கமுடியாது.

ஐ.நா. வேண்டுகோள் விடுக்கலாம். ஆனால், மக்களை விடுவிக்கச் சொல்ல முடியாது.

கிழக்கு மாகாணத்தில் உள்ளோர் அரசினால் 9 மாதங்களின் பின்னர் மீள்குடியமர்த்தப்பட்டனர். எனினும், வவுனியா முகாம்களில் உள்ளோர் மீள்குடியமர்த்தப்பட இன்னும் இரு வருடங்கள் எடுக்கலாம். அங்குள்ள அனைவரும் அல்ல, சிலர் மாத்திரமே அங்கு இரு வருடங்களுக்கு இருக்கவேண்டிவரும் - என்று அவர் தெரிவித்தார்.

இதேவேளை, அரசின் இந்த அறிவிப்புக் குறித்து ஐ.நாவின் கொழும்பு அலுவலகப் பேச்சாளர் கோர்டன் வைய்ஸ் கடும் அதிர்ச்சி அடைந்துள்ளார்.

இது அரசு முன்னர் வழங்கிய வாக்குறுதிக்கு மாறாக உள்ளது - என அவர் தெரிவித்தார்.

இந்த வருட இறுதிக்குள் முகாம்களில் உள்ள 80 வீதமான மக்கள் மீள்குடியமர்த்தப்படுவர் என அரசு முன்னர் அறிவித்தது - என்றும் கோர்டன் வைய்ஸ் சொன்னார்.

# நலன்புரி நிலையங்களில் தமது பணிகளை இடைநிறுத்துவதாக ஐ.சி.ஆர்.சியும் அறிவிப்பு

## அரசு விதிக்கும் கட்டுப்பாடுகள் காரணம்

கொழும்பு, மே 21

வவுனியாவில் உள்ள நலன்புரி நிலையங்களுக்குச் செல்வதற்கு இலங்கை அரசு விதிக்கும் கட்டுப்பாடுகள் காரணமாக அங்குள்ள முகாம்களுக்கான தனது பணிகளை இடைநிறுத்துவதாக செஞ்சிலுவை சர்வதேசக் குழுவும் (ஐ.சி.ஆர்.சி) அறிவித்திருக்கின்றது.

''அரசின் மேலதிகக் கட்டுப்பாடுகள் காரணமாக நாங்கள் வேறு வழியின்றி எமது பணிகளை இடைநிறுத்துகின்றோம்'' - என செஞ்சிலுவைக் குழுவின் இலங்கைக்கான தலைவர் போல் கஸ்ரலா நேற்று மாலை தெரிவித்தார்.

''கடந்த வாரம் இறுதியிலிருந்து எமது நடவடிக்கைகளுக்கு மேலதிகத் தடைகள் விதிக்கப்பட்டன. அத்துடன், பாதுகாப்புக் காரணமாக வவுனியாவிலுள்ள சில முகாம்களுக்குச் செல்ல அனுமதிக்கமுடியாது என இலங்கை அரச அதிகாரிகள் தெரிவித்தனர்'' - என்றும் அவர் சொன்னார்

''இப்பகுதிகளுக்குச் செல்ல முடியாத காரணத்தினால் மக்களின் நிலை என்ன என்பது குறித்து அறியமுடியாமல் இருக்கிறது'' - என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

(மற்றொரு செய்தி 3 ஆம் பக்கத்தில்)

# மட்டக்களப்பு, அம்பாறை மோதல்களில் புலி உறுப்பினர்கள்8 பேர் சுட்டுக்கொலை என அறிவிப்பு

கொழும்பு, மே 21

மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களில் நேற்றுமுன்தினமிரவும் நேற்றுக் காலையும் பாதுகாப்புத் தரப்பினரால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின்போது விடுதலைப் புலிகள் எனச் சந்தேகிக்கப்படும் 8 பேர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மட்டக்களப்பு மாவட்டம் பெரியபுல்லுமலை காட்டுப் பகுதியில் நேற்றுக் காலை வழமையான இராணுவ நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த படையினருக்கும் அவர்கள் எதிர்கொள்ள நேரிட்ட விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான மோதலில் 5 விடுதலைப் புலிகள் கொல்லப்பட்டனர் என்றும் -

அம்பாறை மாவட்டம் கஞ்சிக்குடிச்சாறு காட்டுப் பகுதியில் நேற்முன்தினமிரவு மேற்கொள்ளப்பட்ட வேறொரு நடவடிக்கையின்போது மூன்று விடுதலைப் புலிகள் கொல்லப்பட்டனர் என்றும் பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

# அனைவரும் ஏற்கக்கூடிய அதிகாரப் பகிர்வை முன்வைக்க நல்லதொரு ஆரம்பம் ஏற்பட்டுள்ளது

## கடமையை முடித்துச் செல்லும் அமெ. தூதுவர் ரொபேட் ஓ பிளேக் கருத்து

கொழும்பு, மே 21

மோதல் இடம்பெற்ற பிரதேசங்களிலும், பாதுகாப்பு வலயத்திலும் என்ன நடந்ததென்று சர்வதேச சமூகத்திற்குத் தெரியும் என்று தெரிவித்த இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ரொபேட் ஓ பிளேக், சகல சமூகங்களும் ஏற்றுக்கொள்ளக் கூடிய அதிகாரப் பகிர்வை முன்வைப்பதற்கான நல்லதொரு ஆரம்பம் தற்போது ஏற்பட்டுள்ளது என்றும் அவர் சொன்னார்.

கொழும்பு,கோல்பேஸ் ஹோட்டலில் நேற்று நடத்திய செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார். இலங்கையில் கடமையை முடித்துக் கொண்டு நாடு திரும்பும் ரொபேட் ஓ பிளேக் நடத்திய இறுதி செய்தியாளர் மாநாட்டில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இலங்கை முக்கியமான காலகட்டத்தில் இருக்கின்றது. கிழக்கை புலிகளிடமிருந்து மீட்ட போது பதவிக்கு வந்த நான் வடக்கு - கிழக்கு முழுமையாக மீட்கப்பட்டுள்ளது என ஜனாதிபதி அறிவித்திருக்கின்ற நிலையில் விலகிச்செல்கின்றேன். இது பலவற்றிக்கு நல்ல ஆரம்பமாகும்.

கடந்த 26 வருட இன மோதலின் பின்னர் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் ஐக்கியப்படுத்தப்பட்டுள்ள னர்.இந்நிலையில் நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களுக்கு ஐ.நாவின் நிறுவனங்கள், செஞ்சிலுவை சர்வதேசக் குழு என்பன உதவிகளை வழங்கும் என்ற நம்பிக்கை இருக்கின்றது.

இவ்வாறானதொரு நிலையில் அரசு, சகல இனங்களைச் சேர்ந்தவர்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய அதிகாரப் பகிர்வை முன்வைத்து வெளிப்படையான கருத்தாடல்களை செய்யவேண்டும். இதற்கு அமெரிக்க அரசு உதவும்.

மோதல் இடம்பெற்ற பகுதிகள் மற்றும் பாதுகாப்பு வலயத்தில் என்ன நடந்ததென்று சர்வதேச சமூகத்திற்கு தெரியும். அவை தொடர்பில் சர்வதேச சமூக்த்திற்கு செஞ்சிலுவைக் குழு பல்வேறு தகவல்களை வழங்கியுள்ளது.

நலன்புரி நிலையங்களில் வாழ்கின்ற மக்களின் மேம்பாடுகளுக்கு அரசிற்கு அமெரிக்கா ஒத்துழைப்பு நல்கும். என்றார்.

## வன்னியில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கோரியுள்ளார்.

கடந்த வாரத்திலிருந்து நலன்புரி முகாம்களுக்குச் செல்வதற்கான அனுமதி மறுக்கப்பட்டுள்ளது எனவும் மனிதாபிமான அமைப்புகள் தெரிவித்துள்ளன. (அ-சி)

## யுத்தம் முடிவுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அது தொடர்பான கருத்துகளை நாம் நாடாளுமன்றில் தெரிவித்தோம். யுத்தத்தைக் காரணங்காட்டியே அரசு அவசரகாலச் சட்டத்தை நடைமுறைப்படுத்தியது.

இப்போது யுத்தம் முடிவுற்றதும் இனிமேலும் அவசரகாலச் சட்டத்தை நடைமுறைப்படுத்தி அதனூடாக நாட்டை நிர்வகிக்கக் கூடாது. நாட்டில் சாதாரண நிலைமையை உருவாக்கி அவசரகாலச் சட்டத்தை நீக்கிவிடவேண்டும்.

இன்னும் ஒன்று அல்லது இரண்டு மாதங்களுக்கு இச்சட்டம் நடைமுறையில் இருக்கவேண்டிவரும் என்று நாம் நினைக்கிறோம். அதன் பின்பும் அது நடைமுறையில் இருப்பது நல்லதல்ல.

இந்த ஓரிரு மாதங்களுக்குள் அரசு நாட்டில் சாதாரண நிலைமையை உருவாக்கி விடவேண்டும். அப்போதுதான் நாட்டு மக்களால் உண்மையான யுத்த வெற்றியை அனுபவிக்க முடியும் - என்றார். (அ-சி)

## கொழும்பு வருவ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழர்களின் நலம் உரிய முறையில் பாதுகாக்கப்படும் என அவர் நம்பிக்கை தெரிவித்தார். தான் கொழும்பு செல்கிறார் எனவும் அதற்காக முதலமைச்சரை சந்தித்து இந்த விடயத்தில் அவருடைய ஆலோசனையைப் பெற்றிருக்கிறார் எனவும் நாரயணன் கூறினார்.

பிரபாகரனின் மரணம் குறித்து செய்தியாளர்கள் அவரிடம் கேட்ட போது, தங்களைப் பொறுத்தவரை பிரபாகரன் உயிருடன் இல்லை என்றும், அதேசமயம், இலங் கைக்கு தான் சென்ற பிறகு மேலும் கூடுதல் தகவல்கள் கிடைக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

(அ-சி)

## அரசு விதித்துள்ள....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மோதல் இடம்பெற்ற பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்து வரும் மக்கள் நோய்வாய்ப்பட்டவர்களாகவும், பட்டினியால் வாடியவர்களாகவும் காணப்படுகின்றனர்.

அந்த மக்கள் பதியப்படும் மற்றும் சோதனையிடப்படும் இடங்களில் வசதிகள் போதுமானதாக இல்லை - என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. (அ-சி)

## மோதல் பகுதிகளி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைக்கப்பட்டுள்ளனர் என்றும் -

இவர்களுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான தொடர்பு குறித்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் மஹிந்த சமரசிங்க தெரிவித்தார்.

இதேவேளை சர்வதேச மன்னிப்புச் சபை, மனித உரிமைகளுக்கான மருத்துவர்கள் அமைப்பு, எல்லைகளற்ற செய்தியாளர் அமைப்பு மற்றும் பத்திரிகையாளர்களைப் பாதுகாக்கும் அமைப்பு உட்பட பல அமைப்புகள் இந்த வைத்தியர்களின் நிலை குறித்து கவலை வெளியிட்டுள்ளன.

(அ-சி)

## அகதிகளுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுதி செய்யுமாறு வேண்டுகோள் விடுத்தேன்.நாட்டில் அனைவரையும் உள்ளடக்கிய அரசியல் நடைமுறையொன்றை ஏற்படுத்துமாறும், தமிழர்களை அதற்குள் உள்வாங்குமாறும் கோரினேன்.

நான் மனிதாபிமான உதவிகளை வழங்க முன்வந்தேன். அதேவேளை, இடம் பெயர்ந்தவர்களுக்கு உடனடியாக மனிதாபி மான உதவியை வழங்குமாறு கோரினேன்.

இது பெருமளவு மக்கள் இடம்பெயர்ந்துள்ளதுடன் தொடர்புபட்ட பாரியளவிலான மனிதாபிமானப் பிரச்சினை. அனைத்து மக்களினதும் அனைத்து தேவைகளும் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படுகின்றன என நிரூபிக்கவேண்டிய கடப்பாடு இலங்கை அரசுக்கு உள்ளது.

தமிழ் மக்களையும் ஏனைய சமூகத்தவர்களையும் இணைத்துக்கொள்வதற்கான அரசியல் நடைமுறையை ஆரம்பிக்கு மாறு ராஜபக்ஷவை கேட்டுள்ளேன் - என்றார்.

## தேவை ஏற்பட்டால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னர் விடுதலைப்புலிகளின் உறுப்பினர்கள் கொல்லப்பட்ட போது பொறுப்பேற்க யாருமே முன்வரவில்லை. அடையாளங் காட்டவுமில்லை, தேவை யேற்படவுமில்லை. அவ்வாறிருக்க பிரபாகரனது உடலை உறுதிப்படுத்த சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடமோ பிறநாட்டு அமைப்புக்களிடமோ அடையாளம் காட்டத் தேவையில்லை. பிரபாகரன் இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டார் என்பதில் நாம் உறுதியாக இருக்கின்றோம்.

அந்த உடல் பிரபாகரனுடையதுதான் என்று, அவருடன் சேர்ந்து இயங்கிய விநாயகமூர்த்தி முரளிதரனும் (கருணாவும்) இராணுவத்திடம் சரணடைந்த தயா மாஸ்ரரும் கூறியுள்ளார்கள். ஆகையால் இராணுவத்தால் கைப்பற்றப்பட்ட உடல் பிரபாகரனுடையது என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை என்றும் இராணுவப் பேச்சாளர் பி.பி.ஸிக்குத் தெரிவித்தார்.

இதேவேளை பிரபாகரனின் மனைவி மற்றும் பிள்ளைகள் தற்போது உயிருடன் இருக்கிறார்களா? எங்கு இருக்கிறார்கள் என்பது பற்றித்தமக்கு எதுவுமே தெரியாது என்றும் பிரிகேடியர் நாணயக்கார மேலும் தெரிவித்தார். (அ-07)


புத்தம் புதிய அழகிய
திருமண அழைப்பிதழ்கள்
தற்போது மலிவு விலையில்




மங்களகரமான அழகிய திருமண அழைப்பிதழ்களை
எமது இணையத்தளத்தினூடாகவோ அல்லது நேரடியாகவோ
பார்வையிட்டு பிறிண்ட் வசதியுடன் பெற்றுக்கொள்ள முடியும்

நேரடியாக தொடர்பு கொள்ள வேண்டிய முகவரிகள்

ANDRA DIGITAL IMAGE

# 356A, கஸ்தூரியார் வீதி, நாவலர் சந்தி, யாழ்ப்பாணம்.
# 68, உப்புமடம் சந்தி,கே. கே. எஸ் வீதி, கோண்டாவில்.
T.P :021 2228929, 021 4590268,0602218435.

இணையத்தள முகவரி : www.andradesigns.com

THE SCIENCE CORNER
CLOCK TOWER LANE, JAFFNA
CHEMISTRY - 2009 A/L
இரசாயன இயக்கவியல்
ஆரம்பம்: 23.05.2009 (சனி)
Sat., Sun. - 6.30 - 7.30 a.m.
BY: RAJAH
புதிய அனுமதிகள் வழங்கப்படும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 21.05.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.